திராவிட நாடு

-11-58 | வார வெளியீடு | விலை 16 காசு

# ஆலையும் அப்பளமும்!

( க—மலை )

செத்த பிணமெனத் தூங்குகின்றார்—பலர்
தென்னகம் தேய்வதைக் கண்ட பின்னும்
சித்தம் கொதித்திடு கின்றதையோ—நாளும்
திராவிடரின் துயர் கேட்டவர்க்கே
பித்தம் பிடித்த வடவர்களோ—நம்
பேச்சை உதாசினம் செய்பவராய்
நித்தம் பலப்பல திட்டங்களை—அங்கே
நிறைவேற்றி வடக்கினை வாழ வைப்பார்.

ஆலை அணைகள் வடக்கினிலே—அற்ப
அப்பளம் செய்வதோ தெற்கினிலே
பாலைக் கறப்பது வடக்கிருப்போர்—தீனி
பசுவுக் களிப்பதோ நம்மவர்கள்
வாலைப் பிடிக்கின்ற மந்திரிகள்—இங்கே
வடவரின் தாசராய்க் காணுகின்றார்
காலைப் பிடித்துள்ள கொடுவிலங்கை—நாம்
கடிதில் ஒடித்திடுவோம் வருவீர்.

"ஆரம்ப ஆசிரியர்களே, நாட்டின் நலம் விரும்பிகள். அவர்களுக்குத் தரப்படும் சம்பளமோ மிகமிகக் கொஞ்சம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதற்காக வெட்கப்படுகிறேன். ஆனால், என்ன செய்வது? சம்பளத்தை உயர்த்தலாமென்றாலோ, பணமில்லையே!" என்று இந்தூரில், இந்தக் கிழமை பண்டித நேரு பரிதாபத்தோடு குறிப்பிட்டிருக்கிறார். பணமில்லாத நாட்டில், வசூலாகும் பணம் எப்படி எப்படிச் செலவழிகிறது தெரியுமா? நேருவுடைய சொந்த மாகாணமான ஐக்கிய மாநில சர்க்கார் இந்த ஆண்டு கோடி ரூபாய் செலவழிக்கத் திட்டம் போட்டு நிறைவேற்றி வருகிறார்கள்! எதற்குத் தெரியுமா? படிக்கட்டுகள் கட்ட! கோடி ரூபாய்!! பக்தர்கள் போய்க் குளிக்கும் 'காசி'யில், கங்கை நதியில், சரியான படிக்கட்டுகள் இல்லையாம் -அதற்காகக் கோடி ரூபாய் செலவில் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

✻

"பாரதரத்னம்" "பத்மவிபூஷண்" என்று சர்க்கார் என்ன பட்டங்கள் தருவது? நாங்களும் கொடுப்போம்! யார் தடுக்க முடியும்!!—என்று சொல்லால் அல்ல, செயல் மூலம் கேட்கிறார், ஒரு சுவாமிஜீ. இமாலயத்தைச் சேர்ந்த ரிஷிகேசத்திலுள்ள 'யோக வேதாந்த கூட்டுப் பல்கலைக் கழக' துணை வேந்தர் என்று சொல்லிக்கொள்ளும் சிவானந்த சுவாமி என்பார் சென்னை சங்கராச்சாரி மடத்தைச் சேர்ந்த சந்தானம் என்பவருக்கு, "பக்திரத்னம்" என்கிற பட்டத்தை அளித்துள்ளார். வடமொழியிலுள்ள வேத சூத்திரங்களைச் சரிவர ஒப்புவிப்போருக்கு இப்படிப் பட்டங்கள் அளிப்பாராம் அவர்!!

✻

வருமானவரி கொடுக்காமல் தப்புவது என்பது, 'இப்போது ஒரு கலையாகி வருகிறதல்லவா? இப்படி யாராவது பொய்க் கணக்குக் கொடுத்துத் தப்ப முயன்றால் அவர்களுக்கு ஏழாண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும் என்று பாகிஸ்தான் இராணுவ சர்க்கார் உத்தரவொன்று பிறப்பித்துள்ளது. இந்திய உபகண்டத்தில் ஆண்டுதோறும் சுமார்

## கேளாய்! சேதி!

400-கோடிக்குமேல் ஏமாற்றப்படுகிறது. இங்கும் இப்படி ஒரு சட்டம் போட்டால் என்ன, என்று கேட்கலாம். இப்படி ஒரு சட்டம்மட்டும்வந்தால், காங்கிரஸ் கட்சியில் நேருபோன்ற ஒருசிலரும், உழைத்தலுத்த உண்மைத் தியாகிகள் மட்டும் தானே மிஞ்சுவர்! எத்தனைபேர் சிறைக்குப் போய்விடநேரும்!!

✻

வரிகளைக் கட்டாமல் ஏமாற்றுவதில் ஒரு பெரிய நிபுணர் இருக்கிறார்! ஆண்டுக்கு 5000 பவுன் சம்பாதிக்கும் எஞ்சினீயர் அவர். ஆண்டுக்கு 1500 பவுன் ஊதியம் பெறும் ஒரு பெண் எழுத்தாளர், அவருடைய காதலி. இருவரும் ஒரே இடத்தில் உண்டு, ஒரே படுக்கையில் படுத்து, வாழ்ந்துவருகிறார்கள். எனினும், இன்னும் கலியாணம் செய்துகொண்டு சதிபதிகளாகவில்லை. திருமணம் செய்துகொண்டால், ஆண்டொன்றுக்கு அவர்கள் 536-பவுன் வரி கொடுக்கவேண்டும். இப்போது அது மிச்சம். ஆண்டொன்றுக்குத் தனக்கும் 'துணைவி'யாக இருக்கும் பெண்ணுக்கென்றும் ஒரு தொகையை ஒதுக்கிவிடுகிறார். இதனால் அத்தொகைக்கு வரி கிடையாது. அது மிச்சம். ஓராண்டுபோய், இருவருக்கும் குழந்தைகள் பிறந்தால், குழந்தைகளுக்கென 250-பவுனை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு வரியில்லை. அதுமிச்சம். இப்படி ஒரு ஆண்டுக்குப் பலவிதங்களில் மிச்சம் பிடிக்கிறார்களாம். தங்களிருவருக்கும் 21-குழந்தைகள் பிறந்தானபிறகு, இருவரும் திருமணம் செய்துகொள்வதென இருக்கிறார்களாம். மிச்சக் கணக்குப்படி, வரிகட்டாமல், 20000 பவுன் சேர்த்துவிடலாம் என்பது அவர்கள் திட்டமாம்!!—இத்தகவலை, பிரிட்டிஷ் 'பார்லிமெண்டில் ஒரு உறுப்பினர் வெளியிட்டிருக்கிறார்.

✻

மின்சார விசிறிகள் சுழலும் இந்தக் காலத்திலும் சர்க்கார் அலுவலகங்களில் 'பங்கா' இழுப்பது இருக்கிறதென்றால், ஆச்சரியமாயிருக்கும். நமது சென்னை மாநிலத்தில், சர்க்கார் அலுவலகங்களில், 714-இடங்களில் 'பங்கா' போடுவது இருந்து வருகிறதாம்! இதற்காக ஆண்டு ஒன்றுக்கு 2,19,811 ரூபாய் செலவாகிறதாம்!! "ஏனிது?" என்று சட்டசபையில் கேட்டதற்கு, பணவசதியில்லாததால் பல இடங்களில் இன்னும் மின்சார வசதி செய்யவில்லை என்று பதிலளித்திருக்கிறது சர்க்கார்.

✻

நடிகைகள், நட்சத்திரங்கள், ஓவியர்கள், கதாசிரியர்கள், இப்படியிருக்கின்றனரல்லவா, பிறருக்கு இன்பமூட்டும் திருப்பணியைச் செய்துகொண்டு! இவர்களெல்லாம் அந்த ஒரு வேலையை மட்டும் செய்துவிட்டு உல்லாசமாக இருப்பது சரியுமல்ல முறையுமல்ல என்று கருதுகிறது வியட்நாம் சர்க்கார். அவர்களும், மக்களின் ஒரு பகுதியினரே. அவர்களும் எல்லோரையும்போல், ஓய்வு நேரத்தில் உழைத்து, "வாழ்க்கையை மேலோட்டமாகப் பார்க்காமல், சுகதுக்கங்களை அனுபவிக்கவேண்டும்", என்று முடிவு செய்திருக்கிறது. இதன் விளைவாக இவர்களும் ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபட்டு, உடம்பை வளைத்தாகவேண்டும் என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

★

# நன்று சொன்னார்!

17] ஆண்டு சந்தா ரூ. 8 [16-11-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 18

தென் கிழக்கு ஆசிய நாடுகளின் நிலைமையென்ன, அவைகளுக்கு எப்படியெப்படி உதவிகள் அளிக்கலாம் என்பது பற்றி நேரில் கண்டறிந்து செல்ல சுற்றுப்பயணம் நடாத்திவரும், மேல் ஜெர்மனி துணைப்பிரதமர் பேராசிரியர் லட்வின் எர்கார்ட் இந்தக் கிழமை, கொழும்பில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார், "......சுதந்திரம் வந்த பிறகும், தொடர்ந்து உள்நாட்டுத் தேசிய உணர்ச்சியை, வளர்த்துக்கொண்டேயிருப்பீர்களானால், யாருடைய உதவியும் இல்லாதுபோய் தனியாகக் கிடந்து தவிக்கவேண்டியதுதான்," என்பதாக.

இலங்கையரசு, தமது நாட்டில் சிங்களவரைத் தவிர, வேறு யாருக்கும் இடமில்லையெனும் கருத்தில் நடந்துகொண்டு வரும் போக்கினையே, இவர், இவ்வண்ணம் சுட்டிக்காட்டியிருக்கிறார். வெள்ளையனை ஒழித்திட, அந்நாட்டினர் எழுப்பிய, 'அந்நிய ஆதிக்கம் ஒழிக!' எனும் சொல்லை, தோளோடு தோளிணைந்து பாடுபடும் பிறர்மாட்டும், உபயோகித்துத் தொல்லைகள் தரவும் முற்பட்டிருக்கின்றனர். அதன் காரணமாகவே, நம்மவர்களுக்குக் குடியுரிமை வழங்கவும், தமிழுக்கு உரிய இடம் தரவும் மறுக்கின்றனர்.

ஆதிக்கப் பிடிகளை அகற்றுவது என்பது வேறு! தனிப்பட்ட ஆட்களை அகற்றுவதென்பது வேறு!!—அதிலும், இலங்கைவாழ் தமிழர்கள் ஆதிக்கம் செலுத்தவா அங்கு போனார்கள்? ஐயகோ, கூறவும் நெஞ்சு வேகும்! எனவே, வெள்ளை ஆட்சியை அந்நிய ஆதிக்கம் என்று கருதியதுபோல, நமது காத்தானையும் முத்தனையும் கருதவேண்டியதேயில்லை!!

இப்படி ஒவ்வொரு ஒட்டுறவையும், அவர் அந்நியர், இவர் அந்நியர் என்று வெட்டிக்கொண்டே போவோமானால், உலகத்தின் கண்களுக்கு, நாமே அந்நியர்களாகிவிடுவோம். நேசமும் பாசமும், நமது தாய்த்திரு நாட்டுக்குப் பாடுபட்டு உழைக்கும் தூய உள்ளமும் கொண்ட யாவராயினும், அவர்களைப் புறக்கணிப்பதில் பொருளில்லை; 'உனக்கு இடமில்லை ஓடு,' என்பது ஆபிரிக்க துரைகளுக்கு உகந்த குணமாகுமே ஒழிய, அறநெறிகொண்டோருக்கு உகந்தது அல்ல.

அதனால்தான், தனிநாடு கோரும் நாமும் அடிக்கடி தெளிவுபடுத்தி வருகிறோம் — எமது விடுதலைக் கோரிக்கை, டில்லியின் பிடியிலிருந்து! வடவர் பிடியிலிருந்து! எங்கள் அதிகாரங்களையும், நாங்கள் செலுத்தும் வரிகளையும், எங்கள் வசமே விட்டுவிடுங்கள்! பிறகு நாமும் நீங்களும் நண்பர்களாக வாழ்வோம்!!—என்று. அறிவும் திறனும், திராவிடம் பிரித்த பிறகு, வடக்கேயிருக்குமாயின் அதற்கு நாம் வாழ்த்துரைக்க ஒரு சிறிதும் தயங்கமாட்டோம். ஏனெனில், இன்றைய உலகில், யாவரும் கூட்டுறவு கொண்டுதான் வாழவேண்டி இருக்கிறது! அதற்காகக் "கூடியே" வாழவேண்டும் என்பதல்ல; பிரிந்து இருந்தாலும் "உறவு"கொண்டு வாழ்வதில்தான், மனித அன்பும், ஒருவருக்கொருவரின் சுக துக்கங்களைப் பங்குபோட்டுக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கவும் வழி இருக்கிறது.

அதை மறந்து, இலங்கை அரசினர், வெறிகொண்ட போக்கில், "தமிழனா! போ! தமிழ்மொழியா! உதவாது"என்று விரட்டுவது விவேகமல்ல; நல்லதுமல்ல என்பதை எடுத்துரைப்பதுபோல் பேராசிரியர் லட்வின், அறிவுரை வழங்கியிருக்கிறார். அந்த நிலை வரும்வரை, இலங்கையின் அரசியல் நிரந்தரம் பற்றி, ஒன்றும் கூறுவதற்கு இயலாது எனவும் அவர் தெளிவுபட உரைத்திருக்கிறார்! இலங்கை அரசினர், எண்ணிப்பார்க்கவேண்டும், "தேசீயம்" மட்டுமல்ல, எதிலுமே அதிக "டோஸ்" போட்டுக்கொண்டிருந்தால்—ஆபத்துத்தான்!!

# அழகைக் கெடுக்கவேண்டாம்

——[மா. கி. த.]——

மேற்கு நாட்டவரிடமிருந்து நாம் கற்றுக்கொண்ட பல கலைகளுள் விளம்பரமும் ஒன்றுஆகும். விளம்பரத்தை ஒரு கலையாகப் போற்றும் அளவுக்கு மேற்கு நாடுகளில் ஆர்வம் வளர்ந்திருக்கின்றது. சுவையான முறையில் செய்திகளைச் சுருக்கமாக எடுத்துச் சொல்லி விளக்கிடப் பயன்படுவது விளம்பரம். வாணிபத்திற்கு 'முதல்' எத்துணை முக்கியமோ அத்துணை முக்கியம் விளம்பரமும். 'பூக்கடைக்கு விளம்பரம் எதற்கு என்று கேட்பவர்கள் உளர். ஆனால் அந்தப் பூவின் மணமே அதற்கான விளம்பரம் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நல்ல பொருள் என்றாலும் நாலு பேருக்கு அதனை எடுத்துச் சொன்னால்தான் தெரியும். விளக்கையே குடத்துள் இட்டுவைத்தால் யாருக்கும் தெரியாது. ஆனால் குடத்து விளக்கைக் குன்றின் மேல் எடுத்துவைத்தால் பல கல் தொலைவுக்கும் தெரிகின்றது.

அதனால்தான் விளம்பரக்கலை புதிதாக நம்முடைய நாட்டில் தோன்றியபோதிலும், நல்லவளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. தமிழ் நாட்டுத் தெருக்களில் இன்று காணப்பெறும் சுவரொட்டிகள் அந்தக் கலையின் ஒரு பிரிவுதான்.

அந்தச் சின்னப் பிரிவில் எத்தனை அழகு! எத்தனை கலைகள் இணைகின்றன!

வான வில்லினை ஒத்த வண்ணக் கலவைகள்; கண்ணைக் கவரும் எழில் ஓவியங்கள், அழகு நிறைந்த எழுத்து அமைப்புக்கள் என்று பலவகையில் புதிய புதிய விருந்தாக நித்த நித்தம் வளரக் காண்கின்றோம்.

நம்முடைய நாட்டில் செய்திகள் விரைவில் பரவுவதற்குப் பத்திரிகைகளின் துணையைவிட விளம்பரத்தாள்களின் தொண்டே பெரியது எனலாம். இன்ன நிகழ்ச்சி நடக்க இருக்கின்றது என்பதானாலும் சுவரொட்டிகள் தான் உடனுக்குடன் அந்த விவரங்களை அறிவிக்கின்றன.

ஓய்வின்றி ஓடிக்கொண்டிருக்கும் வாழ்க்கையில், ஓடுகின்ற ஓட்டத்திலேயே எதையும் அறிந்துகொள்ள வாய்ப்புத் தருவன சுவரொட்டிகள்தாம்.

இவ்வளவு பயன்தரும் சுவரொட்டிகளைத் தமிழ் நாட்டின் தெருக்களில் மிகுதியாகக் காண்கின்றோம்.

சுவரின் உண்மை உருவமோ வண்ணமோ தெரியாதவாறு சுவரொட்டிகளின் வண்ணக் கலவைகள் நிறைந்திருக்கின்றன. இது சிலருக்குப் பிடிக்கவில்லை. நகரின் அழகை அவை கெடுக்கின்றன என்கின்றனர்.

அழகு! எண்ணும்போதே இனிக்கும் சொல்தான். எழில் வேண்டாம் என்போர் எவரும் இல்லை. 'அழகுக்கு அடிமையாகாதே மனமே' என்று அறிவுரை சொல்பவர்கள்கூட அழகான இசையில்தான் அதனைச் சொல்கின்றனர். உடல் அழகு பார்க்காதே உள்ளத்தழகு பார் என்பவர்களும் உளர். எப்படியோ அழகு உள்ளேயும் வெளியேயும் இருக்கவேண்டும் என்கின்றோம்.

ஆனால் எது அழகு என்பதில்தான் ஆளுக்கு ஆள் கருத்து வேறுபடும். எதுவாயினும் பார்க்கின்ற பேருடைய பார்வையை, பண்பை ஒட்டியதுதான் கருத்து. உலகம் பலவிதம் ஆயிற்றே!

கடையில் நல்ல விளையாட்டுச் சாமான் ஒன்று இருக்கின்றது. அதைத்துடைத்து மெருகு ஏற்றி
வைத்திருக்கின்றான் கடைக்காரன்
அந்த வழியே ஒரு ஏழைத் தா
தன் மகனை அழைத்துப் போகின்
றாள். அவளுக்கு அடுத்து இன்
னொரு தாய்; தள்ளு வண்டியி
தன் மகனை வைத்துத் தா
தள்ளிக்கொண்டுவர முன்னே
ஒயிலாக நடந்து செல்கின்றாள்
இவர்களை அடுத்து ஒரு கள்ள
அந்த வழியே போகிறான். இவ
கள் மூவரையும் அந்தக் கடை
காரன் பார்க்கிறான். மூவரு
அந்த விளையாட்டுப் பொருளை
காணுகின்றனர்.

கடைக்காரன் உள்ளத்தி
அந்த மூவரும் தன் கடைக்
வந்து அந்த விளையாட்டு
பொருளை விலை பேசக்கூடாதா
அதிலே போட்டி ஏற்பட்டு வி
ஏறினால் தனக்கு எவ்வளவு இல
பம் கிடைக்கும் என்று எண்
கின்றான்.

ஏழைத் தாய் பசிக்கொடுமை
யினைத் தன் குடும்பத்தோ
நித்தநித்தம் அநுபவிக்கின்றவள்
வாழ்க்கையே அவளுக்கு வேதனை
யாக இருக்கும்போது விளையா
டுப் பொருள் ஒருகேடா? ஆன
தனக்குத் தெரியும் அந்த
பேருண்மை தன் மகனுக்கு
தெரியாதே. அதனால் அவ
கண்ணுக்கு அந்தப் பொரு
தெரியாமல் மறைத்துச் செல்
வும் பாடுபடுகின்றாள்.

பின்னால் வரும் பெருமாட்டியோ
அந்தப் பொம்மையை அலட்சி
மாகப் பார்க்கின்றாள். என்மக
இந்தப் பொம்மையை வைத்
விளையாடுவான்—அவனுக்கு இ
துரும்பு ஆயிற்றே — நம்முடை
தகுதிக்கு இது பக்கத்தில் இரு
கக் கூட தகுதியற்றது, வே
விலைஉயர்ந்த பொம்மை ஒன்
வாங்கவேண்டும் என்று அவ
அப்பாலே போய்விடுகின்றாள்.

(13-ம் பக்கம் பார்க்க)

# "டாக்டர் சிவாகோ"

அரங்கண்ணல்

ஒரு நூல்!

ஒப்பற்ற நூல்!! — என்கின்றனர் அறிஞர்கள்.

உன்னதமானது! இலக்கிய உலகுக்குக் கிடைத்த நற்பரிசு என்று உலகம் வியக்கும் பரிசளிக்கின்றனர்.

எழுதியவர், யார்? ஓகோ, அவரா! ஆனாலும் என்ன — பாராட்டுவோம், பரிசு கொடுப்போம், என்ற முடிவுக்கு வருகின்றனர்.

பரிசும், சாதாரணமானதல்ல. பல்லாயிரக்கணக்கான பவுன்கள். பணத்தைவிட அந்தப் பரிசைப் பெறுவதே, ஒரு பாக்கியமாகும்! உலகத்தின் உன்னத எழுத்தாளர் என்கிற மகுடம் சூட்டுவதற்கொப்பாகும்.

அதுபோன்ற பரிசினை, விஞ்ஞானிகளும், வியத்தகு செயல் புரிந்த மேதைகளுமே பெற முடியும்.

**நோபிள் பரிசு!** கிடைத்தது அந்த நூலுக்கு — வருக, ஆசிரியரே! வந்து பெறுக உமக்குரிய மரியாதைகளை என்று அழைப்பும் சென்றது. வருவார், பரிசைப் பெறுவார், பாராட்டுகளை அளிப்போம் என்று, நோபிள் பரிசுக் குழுவினரும் எதிர்பார்த்தனர் — எப்போது வரும் பதில் என்று காத்துக்கிடந்தனர்.

பதில் வந்தது! என்ன பதில்? பெருமூச்சினை ஏந்திய பதில்!! அளித்திட்ட பரிசினைக்கேட்டு, ஆனந்தமடைவார், நன்றி தெரிவிப்பார், உள்ளம் குளிர்வார், உடல் பூரிப்பார்-என்றே எண்ணினர் பரிசுக் குழுவினர்.

துக்கம் தோய்ந்த பதில் வந்தது —தோழர்காள்! தாங்களனுப்பிய பரிசினை நான் ஏற்பதற்கில்லை. திருப்பிவிட்டேன் அழைப்பை. நானிருக்கும் சமுதாயம், என்னை இதுபோன்ற காரியங்களுக்கு அனுமதிக்கவில்லை.

பரிசுக் குழுவினர் திகைத்தனர்! உலகெங்கும் இச்செய்தி பரவிற்று —ஏனெனில், இதுபோல், நோபிள் பரிசினை எவரும் திருப்பியனுப்பார். எனவே, வியந்தது உலகம். பரபரப்புடன் விபரம் அறியத் துடித்தது.

"நானிருக்கும் சமுதாயம் என்னை அனுமதிக்கவில்லை"—அவர் இருக்கும் சமுதாயம் எது? ஏன், அது அனுமதிக்கவில்லை? தன்னாட்டில் பிறந்த ஒரு மேதைக்கு உலகப் பரிசு கிடைப்பதென்றால், மகிழாத நாடுமா இருக்கும்? அந்த நாடு மகிழாதது மட்டுமல்ல, அந்த ஆசிரியரைத் தூற்றியது — துன்மார்க்கம் புரிந்தவன் எனவும் கண்டித்தது.

காட்டு ராஜா தர்பாரோ! சர்வாதிகாரிபிராங்கோவின் அரசோ! மன்னன் பரூக் மறு உருவம் பெற்று வந்தானோ! முடியிழந்த மன்னர்தாம், செங்கோல் பிடி பெற்றுவிட்டனரோ! குடிமகன் பெற்ற பரிசில்கண்டு, முகம் கோணும், முடியுடையான் யார்? தன்னிலும் வீரன் என்பதால் தலை கொய்தவனும், தன் அரசவைப் புலவனைவிட அழகுறப் பாடியவன் என்பதால் பொறுக்க மாட்டாது சிரம் அறுத்தவனும், தனக்குக்கட்டிக்கொடுத்தமாளிகையைப்போல இன்னொருவனுக்கும் கட்டிக்கொடுத்துவிட்டால் தன்னொத்த இன்னொருவன் இருப்பானே என்பதால், மாளிகைஎழுப்பியவன் கைவிரலை வாங்கியவனும், கதைகளில் நாம் படித்த அரசர்களாயிற்றே! அப்படிப்பட்ட அரசர் தம் காலமுமன்றே இது; தீட்டிய நூலினைப் பிறர் பாராட்ட, கேட்கக் கூடாதென்று தடுப்பது யார்? தன் குழந்தையைத் திறமைசாலியென்று பிறர் கொஞ்ச, 'கேட்காதே, என்று தாயைத் தடுக்கும் துடுக்கு மனம் கொண்டது எவர்? கொல்லையில் பூத்த முல்லையை முகரக் கூடாதென்று முழக்கமிடும் முட்டு குணம் படைத்தது எந்த அரசு?—என்று கேள்விகள் பறக்கு முன்னரே பதிலும் வந்தது —வேறு எந்த அரசுமல்ல! ரஷ்ய அரசுதான்!!

என்ன, ரஷ்யாவா? ஏழைகளையும் இயலாதவர்களையும் கசக்கிப் பிழிந்த பிரபுக்களின் கொட்டமடக்கிய அப்புது நாடா! உலக முன்னேற்றவாதிகள், தங்களுக்கொரு ஆதரவாளன் என்று அந்தாதி பாடும் அந்நாடா இப்படிச் செய்தது? ஒருபோதும், இராது; எழுத்தாளர்களின் பெருமைகளையும், தனது நாட்டில் அவர்கள் எப்படியெப்படிச் சிறப்புப்பெற்று வாழ்கிறார்கள் என்கிற அருமையையும் உலகம் தோறும் "சஞ்சிகை"கள் வெளியிட்டு, சண்டமாருதமெனப் புகழ் பரப்பும், ரஷியாவா' இப்படிச் செய்தது? ஒரு எழுத்தாளனைத் தடுத்தது! புகழைப் பெறாதே என்று கடிவாளமிட்டது! குழந்தை பாராட்டப்படுவதைக் காணாத் தவிக்கும் தாயின் கரங்களைப் பிடித்திழுத்தது! தடிச் சிறுக்கி— நீ பெற்றது குழந்தையா?—அது குட்டிச் சாத்தான், என்று இழித்தும் பழித்தும் பேசிற்று— போகாதே—போனால்...பிறகு...... என்று ருஷியாவா ஒரு எழுத்தாளருக்கு எச்சரிக்கை விடுத்தது? உலக சபையில், சீனாவுக்கு இடம் தர மறுக்கும் அமெரிக்க வல்லரசின் அக்கிரமத்தைக் கண்டிக்கும் ருஷியாவா? உலக முழுவதும் சமாதானம் பரவவேண்டும் என்று வெண் புறாக்களைப் பறக்கவிடும், அந்த வியப்புறு தேசமா, இப்படிச் செய்தது?— என்று, முற்போக்கு வாதிகள் திகைக்க;

பார்! பார்! இதுதான் ரஷ்ய ஆட்சி! கம்யூனிஸ்டு ஆட்சியில், தனிநபர் உரிமையிருக்காது— தன்புகழ் பாடுவோருக்கு மட்டுமே இடமிருக்கும். கொஞ்சம் விரோதித்துக் கொண்டால், தலை போகும்—என்று சொல்லி வரும்

றோமே, அது எவ்வளவு உண்மை யென்று பார்த்தீர்களா? எங்கள் நாட்டிலும்தான் எழுத்தாளர்கள் பலவிதமானவர்கள் இருக்கிறார்கள். பல கொள்கைகளை விமர்சிக்கிறார்கள். இப்படியா செய்கிறோம்? இது ஜனநாயகம்! அது, ஏக நாயகம்!! —என்று, ரஷியா என்றாலே பாணம் தொடுப்போர், பற்களைத் துடைத்துக்கொண்டு பேச;

என்னடா இது! ஏன் இப்படிச் செய்தது ருஷியா? ஏதோ காரண மிருக்கவேண்டும்—நோபிள் பரிசு பெற்ற வேறு இரண்டு விஞ்ஞானிகளை மட்டும் அனுமதிக்கும்போது, ஏன் இந்த ஆசிரியரைப் போகச் சொல்லவில்லை—என்ன காரணம், என்று நம்போன்றோர் விளக்க மறியாமல் விழிக்க;

போரிஸ்பாஸ்டர்நாக் எனும் ருஷிய ஆசிரியர் தீட்டிய "டாக்டர் சிவாகோ" எனும் நூல் உலகின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது இந்தக் கிழமை.

* * *

டால்ஸ்டாய் எழுதிய 'போரும் காதலும்' போன்றது என்கிறார்கள் இந்நூலை.

செச்சே! எங்களையும் எமதரசையும் இழித்துரைப்பது என்கிறார்கள்-ருஷியர்கள். இப்படி இழித்து எழுதினதால்தான் நோபிள் பரிசைக் கொடுத்திருக்கிறார்கள் என்கிறார்கள் ருஷியர்கள்.

அல்ல! அல்ல! நடையழகையும் கதையழகையும் பாரீர் — அடடா —என்கின்றனர், பரிசு கொடுத்தோர்.

ரஷிய நாட்டில் வாழ்ந்த ஒருவரின் வாழ்க்கையை மையமாக வைத்து, எழுதப்பட்ட நூல்தான், டாக்டர் சிவாகோ. ரஷியாவின் உன்னதமான வர்ணனைகளையும் இயற்கை எழில்களையும், இந்நூலில் அழகாகப் படம் பிடித்திருக்கிறாராம் ஆசிரியர். அதோடன்றி, ருஷிய நாடு கடந்த 50 ஆண்டுக்காலத்தில், தாண்டிவந்திருக்கும் சரித்திர நிகழ்ச்சிகளையும், டாக்டர் சிவாகோ எனும் கதாபாத்திரமூலம், தெளிவாக விளக்கியிருக்கிறாராம் ஆசிரியர்.

ஸ்டாலின் ஒழிந்தார்!

அவராட்சியில், நடந்தவை என்ன?

ஆட்சிக்கு வருமுன் என்னென்ன நடந்தது.

இவைகளை மையமாக வைத்தே, இந்நூலை எழுதினாராம் பாஸ்டர்நாக்! நிச்சயம் ஸ்டாலின் இருந்தபோது இந்நூலை எழுதியிருந்தால் இவர் உயிர் போயிருக்கும். ஏனென்றால், இப்படி நடக்கும் என்று பயந்ததால் தானே க்ருஷேவ்கூட, அவர் செத்த பிறகே கண்டனத் தீர்மானம் கொண்டுவந்தார்! எனவே, ஸ்டாலின் இறந்த பிறகே, இந்த நூலை எழுதியிருக்கிறார் பாஸ்டர்நாக்—ரஷிய சர்க்காரிடம் நூலையும் காட்டினாராம் — அவர்களும் பார்த்து, இது பிரசுரத்துக்கு இலாயக்கானதுதான் என்று ஒப்புதல் அளித்தனர். அப்போது தாங்களே ஒப்புதல் அளித்த அதே நூலைத்தான் இன்று கண்டிக்கின்றனர்; ஏசுகின்றனர்; ஆசிரியர் பரிசு பெறவும் இலாயக்கில்லாதவர் எனவும் சொல்லுகின்றனர். அப்போது ஏன் அனுமதித்தனர், ஸ்டாலினைத்திட்டியதாலா!

ஜார் காலத்து ருஷியாவை எதிர்த்துப் போராடி எண்ணற்ற வீரர்கள் மாண்டார்களல்லவா? அதைப்போல, ஸ்டாலின் காலத்திய சோவியத் யூனியனை டாக்டர் சிவாகோ சமாளித்தார் — என்பதே நாவலின் கருத்தாம்.

இந் நாவலில் பல இடங்களில், ஸ்டாலினின் கொடுமைகளை மட்டுமல்ல, ருஷியசர்க்காரின் போக்கையும் மறைமுகமாகத் தாக்கியிருக்கின்றது!!

> புரட்சியை உருவாக்கினார்களே ஒழிய —புதுமைகளைச் சிருஷ்டிக்கும் திறனில்லை தலைவர்களுக்கு.
>
> கடவுளாக்கப்பட்டு விட்டார்கள்; அதனால், பெருமையை ரசிக்கும் ஊமைகளாகி விட்டார்கள்.
>
> மார்க்கீசம் பூரணத்துவம் பெற்றதல்ல; விஞ்ஞான ரீதியோடு வைத்துப் பார்க்க, இன்னும் சில குறைகள் சரிசெய்யப்படவேண்டும்......

உண்மையில், இதுபோன்ற வரிகள், ருஷியவாதிகளை எரிச்சலில் ஆழ்த்தியதில் வியப்பில்லை.

ஒரு வேளை, இதே வரிகள் காரணமாகத்தான், நோபிள் பரிசு கொடுக்க முன் வந்ததாகக்கூட இருக்கலாம்!

அந்த ஆசிரியரை, ரஷிய எழுத்தாளர்கள் தமது சங்கத்திலிருந்து நீக்கியிருக்கின்றனர் — உடனே அரசாங்கம் தன் கருத்தை அறிவித்தது-இத்தகைய சூழ்நிலையில் அந்தப் பரிசை ஏற்றால் தனக்கு என்ன நேரும் என்பதை அவர் புரிந்துகொண்டு விட்டதால், "நானிருக்கும் சமுதாயம் என்னை அனுமதிக்கவில்லை", என்று பதிலனுப்பிவிட்டார்.

* * *

நமக்கேற்படும் ஆச்சரியமெல்லாம், எவ்வளவோ முன் எச்சரிக்கையுடனிருக்கும் ருஷிய அரசு எப்படி இந்நூலை, தன்னாட்டில் வெளியிட்டுப் பரப்ப முதலில் சம்மதித்தது என்பதுதான்! அப்போது சம்மதித்துவிட்டு, இப்போது ஏன் பாயவேண்டும் பயப்படவேண்டும்? இதனால் என்ன பயன்!

ரஷியாவின் முறைகளைக் குறை சொல்லக்கூடியவர் யாருமே, ரஷியாவில் இல்லை—என்று இதுவரை பலர் கருதிவருகிறார்கள்.

இல்லை! இதோ பாஸ்டர்நாக்!—என்று முதலாளித்துவ நாடுகள், கூறுகின்றன. இப்படி ஒரு பாஸ்டர்நாக் எழுதுகிற அளவுக்கு, ரஷியா இருக்குமாயின், அத்தவறுகளையறிந்து அவைகளைப் போக்குவதுதான் நல்லதாகும்.

ஏனெனில் பாஸ்டர்நாக், அந்நியரல்ல! ரஷ்யாவிலேயே இன்னும் இருக்கிறவர்!

நடையழகும் கவிதைத்திறனும் உடையவர் என்பதால் அவரை ஒரு ஏனோதானோ என்று சொல்லுவதற்குமில்லை.

அப்படிப்பட்டவரின் கருத்துக்களை ஏற்றுக் காரியங்களைச் செய்திருக்க வேண்டும்; இல்லையேல், இன்னொரு பிரசித்திபெற்ற ஆசிரியரைக்கொண்டு, அவரது எண்ணங்களையும் எழுத்தையும் முறியடித்திருக்க வேண்டும்.

அதைவிட்டு, ஸ்டாலின் சகாப்தத்தைத்தானே இது குறிக்கிறது என்று அன்று விட்டுவிட்டார்கள் போலும்! இன்று 'நோபிள் பரிசு'கொடுத்து பிரசித்திப்படுத்துகிறார்கள் என்றதும் பெருமூச்சு வந்திருக்கிறது!!

மொத்தத்தில் இந்நூல் விஷயம், வல்லரசுகளின் வெறும் வாய்க்கு வாய்த்த "நல்ல அவல்" என்றே கூறவேண்டும்.

# மறந்திடப்போமோ!

சீன நாட்டின் மாபெரும் மன்னனாக விளங்கிய யான்லீ என்பானின் சமாதியை இந்தக் கிழமை தோண்டிப் பார்த்தார்களாம்! யாரும் நுழையக்கூடாதென்று தடைபோடப்பட்டிருந்த, அச்சமாதியை ஆராய்ச்சி செய்யும் பணியைச் செஞ்சீன சர்க்கார் மேற்கொண்டது. சமாதியா அது? அல்ல! பூமிக்குள்ளே நிறுவப்பட்ட உன்னதமான அரண்மனை என்று அறிவிக்கிறார்கள்! அவ்வளவு அழகும் சிறப்பும், தென்படுகிறதாம். எகிப்து நாட்டிலே உள்ள பிரமிட் கோபுரங்கள், எவ்விதம் காண்போரின் இதயத்தையும், நுழைந்து பார்ப்போரின் கருத்தையும் கவர்கிறதோ, அது போல உள்ளதாம், சீன மன்னனின் சமாதி. அந்தச் சமாதிக்குள்ளே கொட்டிவைக்கப்பட்டுள்ள தங்கமும், வைரமும், முத்தும், நவரத்தினங்களும் ஏராளமாம். சவப்பெட்டியினருகே விதவிதமான ஆபரணங்கள் இருந்தனவாம்! அவை எங்கேயிருந்து தருவிக்கப்பட்டன என்று ஆராய்ந்தார்களாம், சீனநாட்டு வல்லுநர்கள். **தென்கடல் தந்த செல்வம் இவை! தென்னிந்தியாவில் செய்யப்பட்ட நகைகள் இவை!** — என்று தெரிவிக்கிறார்கள்.

* * *

தறித்தொழில் பற்றி சென்ற கிழமை 'மெயில்' ஏடு ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கிறது. உலகத்தில் எங்கெங்கு தறித்தொழில் ஆதிகாலத்திலிருந்தது என்பது குறித்து ரசமான தகவல்களை அது தந்திருக்கிறது. கற்காலத்திலேயே தென்னாட்டில் நூற்கும் தொழில் சிறந்து விளங்கியது என்பதை விளக்குகிறது அந்த ஏடு. இரும்பும் மரத்தொழிலும் இல்லாத காலத்திலே, களிமண்ணாலும், கல்லாலும் செய்யப்பட்ட நூற்கும் சாதனங்கள் இருந்தனவாம். மொகஞ்சதாரோ — ஆரப்பா போன்ற இடங்களில் (மொகஞ்சதாரோ, இப்போது பாகிஸ்தானிலிருக்கிறது) செய்த ஆராய்ச்சியின்போது, மொகஞ்சதாரோவில் இதுபோன்ற நூற்கும் சாதனங்கள் தென்பட்டனவாம். 3500 ஆண்டுகளுக்கு முன்பே இங்கு வாழ்ந்தவர்கள், தறித்தொழிலில் மேம்பாடு அடைந்திருக்க வேண்டும்--அங்கு அகப்பட்ட ஒரு சித்திரக் குறிப்பைப் பார்த்தபொழுது, நெசவுத் தொழிலில் மட்டுமல்ல, நெய்த ஆடையை நேர்த்தியாகச் செப்பனிட்டு அணிவதிலும் அங்கு வாழ்ந்தவர்கள், சிறந்தவர்களாயிருந்திருக்கவேண்டும் என்கிறார் ஏட்டாளர். தெளிவாகவே, தலைப்பிட்டிருக்கிறார், "ஆரியர்கள் நுழைவதற்கு முன்பே நெசவுத் தொழில் சிறந்து விளங்கிற்று" என்று.

* * *

"கிருஸ்து பிறக்காததற்கு 500-ஆண்டுகளுக்கு முன்பே, தென்னாட்டிலிருந்து பாபிலோனுக்கு, மயிலும் அரிசியும் சந்தனமும் ஏற்றுமதி செய்யப்பட்டன. மலபாரிலிருந்து அனுப்பப்பட்ட மிளகைப்பற்றியும், முத்துகளைக் குறித்தும், வைடூரிய மணிகளின் வகைகள் என்னென்ன என்றும் ரோமானிய வியாபாரியும் சரித ஆசிரியனுமான பெரிபுனுஸ் எழுதுகிறான். கோவைப் பகுதியிலிருந்துபோன வைடூரிய மணிகளுக்கு, ரோமாபுரியில் நல்ல கிராக்கியிருந்ததாம். கடல் கடந்து வாணிபம் செய்யவேண்டியிருந்ததால், கப்பல் கட்டும் தொழில் சிறந்து விளங்கிற்று இங்கு. இரவு நேரங்களில் அரண்மனைகளைக் காவல்புரிய யவனர்களை வேலைக்கு வைத்திருந்தார்கள் தமிழ் மன்னர்கள்! கடல் பக்கமாக வரும் வெளிநாட்டினரை விரட்டியும் அதட்டியும் தங்கள் ஆட்சியைச் செலுத்தினார்கள் சேரமன்னர்கள்! ஆந்திராவில் ஆட்சிபுரிந்த மன்னர்களும் (சாதவாகனர்கள்) கடலோர வாணிபத்தில் சிறந்து விளங்கினார்கள், வட இந்தியக் கவிஞன் பாணன் 'மூன்று கடலுக்கு அதிபதிகள்' என்று புகழ்ந்திருக்கிறான்!" என்று இந்தக் கிழமை "இந்து" ஏட்டிலே, பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார், புகழ்ந்து புகழ்ந்து எழுதுகிறார்.

"இந்திய சரித்திரம் எப்போது ஆரம்பமாயிற்று தெரியுமா? 3000 ஆண்டுகளுக்கு முன்பு, ஆரியர்கள் நுழைந்ததற்குப் பிறகுதான் என்கிறார்கள்! ஆனால், சுமார் முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு, மொகஞ்சதாரோ ஆரப்பா பற்றிய ஆராய்ச்சிகள் கிடைத்ததும், இந்திய சரித்திரம் அதற்கு முன்னமே பிரசித்திபெற்றதாகும். ஆரியர்கள் வருகைக்கு முன்பே கீர்த்தியுடனிருந்ததாகும் என்று பேசப்பட்டது. இந்த ஆராய்ச்சிகளின் விளைவாக, அப்போதே மிக மிக நாகரிகம் வாய்ந்த மக்கள் வசித்தார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள் தான், தென்னாட்டிலிருந்த திராவிடர்கள் என்

றும், உணரப்பட்டது". என்று விளக்கமளிக்கிறார், டில்லி சர்க்காரின் கல்வி மந்திரியாக விளங்கும், ஹுமாயூன் கபீர் என்பார், நவ. 4ந் தேதி சென்னையில் பேசிய போது.

*　*　*

அறிஞர்கள் எழுதுகிறார்கள்! இதுவரை வெளியிடத் தயங்கிய ஏடுகள் வெளியிடுகின்றன! ஆராய்ச்சிகள் ஒவ்வொன்றும் அற்றைநாள் திராவிடத்தின் புகழைப்பாடுகின்றன! டில்லி மந்திரியாரும் ஒப்புக்கொள்கிறார்! திராவிடத்தின் புகழ்குறித்து!

உலகத்திலேயே, ஒரு காலத்திலே, ஏற்றம் பெற்றிருந்த பூமி, தென்னகம்—இதனை மறுப்போர் உண்டு; அவர்கள் வம்பர்கள். அவர்களைத் தவிர்த்து, ஏனையோரெல்லாம், இதன் புகழ் பாடாமலில்லை. ஆடை நெய்யத்தெரியாத காலத்திலேயே, அறிந்திருந்தான் திராவிட நாட்டான்! நகை வகைகளுக்கு, 'சுராஜ்மல்சும்', 'தாகுப்தாசும்' ஏற்படாத காலத்திலேயே இங்கிருந்து செய்யப்பட்டவைகள், சீனத்துக்கும் ரோமாபுரிக்கும் போயின! கட்டைக்கட்டப்பது எப்படியென்று அறியாது பலர் யோசித்த காலத்திலேயே, கலம் செய்தான்-கடலில் விட்டான்—கடந்து சென்றான்—தென்னகத்தின் ஒளிபரப்பினான்.

பருத்திநூல் பட்டுநூல்
அமைத்தாடையரக்கலும்
சுமத்தலும் பிறவுங் காருக வினைத்தொழில்

(திவாகரம்)

*

ஆளில் பெண்டிர் தாளிற் செய்த
நுணங்குநுண் பனுவல்
போலக் கணங்கொள
ஆடுமழை தவழுங் கோடுயர் நெடுவரை

(நற்றிணை)

[உழைத்துப்போடும் கணவனை இழந்த கைம்பெண்கள் நூற்பதற்காக நுட்பமாகப்பதனிட்டு வைத்த நுண்ணிய பஞ்சுபோல, கூட்டமாகக் காற்றால் அலைக்கழிக்கப்படும் வெண்மேகம் தவழ்கின்ற நெடியமலை...]

*

"கொங்கு விம்மு பூங்கோதை மாதரார்
பங்கயப் பகைப்பருவம் வந்தென
எங்கு மில்லன வெலிமயர்த்தொழிற்
பொங்கு பூம்புகைப் போர்வைதாங்கினர்',

(சீவகசிந்தாமணி)

*

நெசவுத் தொழிலின் சிறப்பினை, இலக்கியங்கள் இப்படி எடுத்தோதுகின்றன! வாயில்—சீட்டி—ரேயான் — இமிடேஷன் சில்க் — பெனாரஸ்—கடாவ்— என்கிறார்கள் இன்று. யாருக்குத் தெரியும்? தென்னாட்டில், கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக்கம்மி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேகங்கம், புங்கர்க்கழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, பெண்பொத்தி, செம்பொத்தி, பனிப்பொத்தி—என்று இப்படி எண்ணிறந்த ஆடைவகைகள் இருந்தன, என்கிற உண்மை!!

*

"புலிபொறுத்துப் பெம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்"

(பட்டினப்பாலை)

*

காவிரிப் பூம்பட்டினத்துத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதியாகும் சரக்குகள்மீது, சோழ அரசனது புலி முத்திரை குத்தப்படுமாம்! சுங்கம் வசூலிக்கப்படுமாம்!! அடடா, என்னென்ன பொருள்கள், எங்கெங்கேபோயின என்பது பற்றி, இலக்கியங்கள் தரும் விளக்கங்கள் கொஞ்ச நஞ்சமா? நமதரும் புலவர் மணிகளில் பலரும், தொழில் துறையினராகத்தான் வாழ்ந்திருக்கிறார்கள்—மணிமேகலை செய்தளித்த சீத்தலைச் சாத்தனார், நெல்லும் வரகும் வைத்துவிற்ற காலவணிகர்! அறுவை வாணிகன் இளவேட்டனார், என்பார் ஆடை வியாபாரி! உறையூர் தாமோதரனார் என்பார் மருத்துவர்! மதுரைப்பண்ட வாணிகன் இளநந்தனார் பலசரக்கு வியாபாரஞ்செய்தவர்! மதுரை வெண்ணாகனார் பொன்செய் கொல்லர்!!

*

ஜாவா, சுமத்ரா, கம்போடியா, சிங்கப்பூர், பர்மா, இலங்கை, ரோமாபுரி, அரேபியா, கிரேக்கம், எகிப்து—இப்படிப்போகும் பட்டியல்! இந்த நாடுகளோடெல்லாம், அந்தக் காலத்திலேயே நேசமும் தொடர்புங்கொண்டு வாழ்ந்தவன் தமிழன்!

தமிழ் மண் என்றால், இப்போது சொல்லப்படும் 'எஞ்சிய சென்னை மாநிலமல்ல'—கேரளமும், ஆந்திரமும், பிற இடங்களும் தமிழின் தொட்டில்களாகயிருந்த காலம் அது.

அந்தக் காலத்தில் இவ்வளவு சிறப்போடு வாழ்ந்ததை, இலக்கியங்களில் படித்தோம் — எடுத்தோதினோம். கேளாக் காதினராக, கடும் சொற்களை வீசினர், ஏட்டாளர்களும், அறிந்தவர்களும், இன்று அவர்களே, எழுதுகின்றனர் — திராவிடத்தின் தொல்புகழ் குறித்து எழுதுவதுதான் மேதாவிலாசம் என்று கருதுகின்றனர். டில்லி மந்திரியாரே, வெளியிடுகிறார்.

இருந்தும்!
இவ்வளவு புகழ்,
இருந்தும்!!
என்ன கிடைக்கிறது
இந்த மண்ணுக்கு?

(10-ம் பக்கம் பார்க்க)

பருவமடைந்து இரண்டு அல்லது மூன்று வருடங்கள் கழித்த பெண்ணை மணப்பதற்கும், பருவமடைந்து ஆறு அல்லது ஏழு வருடங்கள் கழித்த பெண்ணை மணப்பதற்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், முன்னவள் ஓயாமல் சிரித்து விளையாடும் இளங் காதலியாயிருப்பாள்; பின்னவள் உலகம் தெரிந்த குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்ணாக இருப்பாள். ஆனால் வயதில் மூத்தவளையும் அதிகக் குறைவுள்ளவளையும் மணப்பது விரும்பத்தக்கதல்ல!

# படை ஆளும் பக்கத்து நாடு

சமீப காலம் வரை பாகிஸ்தான் அரசியல் வானில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளுக்கும்— குழப்பங்களுக்கும் சிகரம் வைத்ததுபோல், இனிமேல் அங்கே அந்தக் குழப்பங்கள் புதிய ரூபத்தைப் பெறுமா அல்லது அதிகமாகுமா என்று எவரும் சந்தேகப்படத்தக்க வகையில் பாகிஸ்தானின் ஆட்சிப் பொறுப்பை இராணுவம் கைப்பற்றி இருக்கிறது! உலக வல்லரசுகள் தங்கள் கண்களை அகல விரித்துக்கொண்டு இந்த நிகழ்ச்சிகளைக்கூர்ந்து கவனித்து வருகின்றன. ஆனால் இந்தியப் பேரரசு இதுபற்றி எதுவும் அதிகம் கூற மறுக்கிறது — மௌனம் சாதிக்கிறது. எவர் எது சொன்னாலும் எப்படிப்பட்ட அபிப்பிராயம் கூறினாலும், பாகிஸ்தானில் கடந்த ஒரு திங்களுக்கு மேலாக இராணுவ ஆட்சி அமுல் செய்யப்பட்டு வருகிறதன்மூலம், புதிய புதிய சட்டங்கள் நாளும் தோன்றியவண்ணம் இருக்கின்றன. பழய தலைவர்கள் —மக்கள் விரோதிகள் என்று கருதப்பட்டவர்கள், கைது செய்யப்பட்ட வண்ணம் உள்ளனர்!

ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பை இராணுவம கைப்பற்றுவதென்பது ஜனநாயகத்தின் விசனிக்கத்தக்க முடிவுதான் என்றாலும், இதைவிட்டால் வேறு வழியில்லை என்னுமளவுக்கு பாகிஸ்தானின் அரசியல் நிலைமைகள் இருந்து வந்திருக்கின்றன. லஞ்ச லாவண்யமும், போட்டி—பொறாமைகளும், அந்த நாட்டின் அரசியலில் சர்வசாதாரண நிகழ்ச்சிகளாகி விட்டிருக்கின்றன. மக்களின் நிலை மறந்த, அப்படி ஒரு இனம் இருப்பதையே ஒப்புக்கொள்ள மறுக்கிற மதோன்மத்தர்கள் கையில் நிர்வாகம் சிக்கிச் சீரழிந்திருக்கிறது. சட்டசபை குஸ்தி மேடையாகியிருக்கிறது, அரசியல் நாகரிகம் அங்கே அலங்கோலப்படுத்தப்பட்டு இருக்கிறது. இதன் விளைவுகளும், ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருக்கும் கட்சியை எதிர்த்துப் போராடி ஆட்சியைக் கைப்பற்ற அங்கே பலமான ஒரு எதிர்க்கட்சி இல்லாத நிலையும் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஏற்படுவதற்கான தகுந்த சூழ்நிலையை உண்டாக்கிக் கொடுததுவிட்டன. இந்தப்பேருண்மையை மிஸ்ரா தனது பதவிப் பிரகடனத்திலும் தெளிவுபடுத்தியிருந்தார்.

**★ மான் ★**

ஜனப் ஜின்னாவின் கனவிலே மலர்ந்து, லியாகத் அலிகானின் பெருமைப்பிலே பூத்துக்குலுங்கிப் புகழ் மணம் பரப்பவேண்டிய பாகிஸ்தான பதவிப் பித்தர்களின் கையிலே சிக்கிச் சீரழிந்திருக்கிறது. அதன் விளைவாகத்தான் இராணுவ ஆட்சி ஏற்பட்டிருக்கிறது என்றார் மிஸ்ரா. தான் அத்தகைய ஆட்சிக்கு வழி செய்யாவிடில் சேனாதிபதி அயூப்கானே அத்தகைய நிலைமைகளை உண்டாக்கியிருப்பார் என்றார்.

என்றாலும் இங்குள்ள அமைச்சர்கள், இப்போதே தங்கள் காலட்சேபத்தை ஆரம்பித்துவிட்டார்கள். பார், பார் பாகிஸ்தானத்தைப் பார்! நாட்டைத் துண்டாடினால் அதுபோன்ற இராணுவ ஆட்சிதான் இங்கேயும் ஏற்படும், எனவே மக்களே எச்சரிக்கையாக இருங்கள் என்று உஷார் நோட்டீஸ் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள், இவர்கள் எஜமானனாக இருக்கிற டில்லி சர்க்கார் இது பற்றிப் பத்திரிகை நிருபர்களுக்கே அபிப்பிராயம் எதுவும் கூறுவதற்குத் தயங்கும்போது, அதன் எடுபிடிகளாக இங்கே இருக்கிற இவர்கள் தங்கள் கூற்றுக்குச் சப்பைக்கட்டு கட்ட, எதிர்கட்சிகளின் பிரச்சாரத்தைப் பொய்யாக்க, இந்தக் கூற்றைத் தங்களுக்குக்காகப் பயன்படுத்த முந்துகிறார்கள்!

பாகிஸ்தானின் தோற்றமே,— அது கோரிப் பெற்றவிதமே இயற்கை அமைப்பைக் காட்டியல்ல, வரலாற்று ஆதாரங்களைச் சொல்லியுமல்ல. மைனாரிட்டிகளாக இருக்கின்ற முஸ்லீம்கள் நலம் ஒன்றையே மனதில்கொண்டு கேட்டுப்பெற்றநாடு பாகிஸ்தானம். கிழக்கு மேற்கு பாகிஸ்தானம் என்று பிளவுபட்டு இடையே இந்துஸ்தானத்தையும் உள்ளடக்கிக் கொண்டிருப்பதுதான் பாகிஸ்தானம்! இத்தகைய பாகிஸ்தானத்தை உதாரணம் காட்டித்தான் இங்குள்ளவர்கள் பேசுகிறார்கள், நாளை திராவிட நாடு பிரிந்தாலும் இந்தக்கதிதான் ஏற்படும் என்று.

பாகிஸ்தான் பிரச்னையை ஆரம்பத்திலிருந்து வெறுத்தவர்கள்—கண்டித்தவர்கள், அது பகல் கனவு என்று கேலி பேசியவர்கள், —பாகிஸ்தானம் என்ற எல்லைக்கோடு கிழிக்கப்பட்டு விட்டது என்று கேள்விப்பட்டவுடன், அது எங்கே நிலைக்கப்போகிறது என்று ஆருடம் கணித்தவர்கள், அது வேரூன்றி அமெரிக்காவுடனும், பிறநாடுகளுடனும் பலதிறப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்கொள்கிற அளவு வளர்ந்தவுடன், 'பாரத'த்துடன் இது போட்டிபோட முடியுமோ என்ற வினவை எழுப்புவதின் மூலம், தங்கள் மன அரிப்பைச் சொறிந்துகொண்டவர்கள் —இவர்கள் இன்றைக்கு அங்கே தோன்றிய இராணுவ ஆட்சியை உதாரணமாக எடுத்துக் காட்டுவதும், அதன் மூலம் திராவிட நாடுதிட்டத்தைப்பொய்யாக்கிவிடலாம், பொதுமக்களை ஏமாற்றிவிடலாம் என்று நினைப்பதும்தான் விந்தையாக இருக்கிறது! இதுவரை பாகிஸ்தானில் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சியையும் சுட்டிக்காட்டிக் குறைபேசியவர்கள் இப்போது ஏற்பட்டிருக்கிற இராணுவ ஆட்சியைத்தங்கள்வாதத்துக்குப் பக்கபலமாக எடுத்தாள்வதில்

வெட்கப்பட்டதாகவே தெரியவில்லை.

"எப்போதுமே ஒருநாடு நிலையாக இருக்க வேண்டுமானால், அங்கே ஏழை பணக்காரர்கள் என்ற வித்தியாசம் இருக்கக் கூடாது. இதைத்தான் "சமுதாய ஒப்பந்தம்" என்னும் நூலில் 'ரூசோ' அழகாகச் சொன்னான், "ராஜ்யமானது நிலையாக இருக்கவேண்டுமானால், சர்க்கார் ஒழுங்காக இருக்கவேண்டும். அளவுக்கு மீறிய செல்வம், வறுமை இரண்டிற்கும் உள்ள இடைவெளி குறையவேண்டும். அதாவது பணக்காரர்களும் இருக்கக் கூடாது, ஏழைகளும் இருக்கக் கூடாது. ஏன் எனில் இருவருமே பொதுஜன நன்மைக்கு விரோதமானவர்கள். பணக்காரர்கள் கொடுங்கோலர்களாய் இருக்கிறார்கள். ஏழைகள் அவர்களுக்கு அடிமைகளாயிருக்கிறார்கள். இந்த இரண்டுபேருக்கும் மத்தியில் நான் பொதுஜன சுதந்திரம் என்பது ஏலம் போடப்படுகிறது. ஒரு சாரார், அதாவது பணக்காரர்கள் அதை வாங்குகிறார்கள். இன்னொரு சாரார் ஏழைகள் அதை விற்கிறார்கள்."

இதே முறையில் பணக்காரர்களும், பதவிப்பித்தர்களும் நடத்திய இலாப வேட்டையின் விளைவுதான் பாகிஸ்தானில் தனி மனித சுதந்திரம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு இராணுவ ஆட்சி தோன்றியிருக்கிறது என்ற மகத்தான உண்மையை மறுப்பவர்களும் மறைப்பவர்களுந்தான், இந்த நிலைமையினை மட்டும் சுட்டிக்காட்டி, சரிதச் சான்றுகளால், வரலாற்றுப் புகழால், இலக்கியச் செல்வத்தால் — இயற்கை அரண்களால், பூகோள அமைப்புகளால், தனித்தியங்கிய—தனித்தியங்கத் துடிக்கிற நம் நாட்டின் எழுச்சியைப் பொய்யாக்க நினைக்கின்றனர். தவறான உதாரணங்களையும், தாறுமாறான வாதங்களையும் சொல்லி மக்களைத் திகைப்பில் ஆழ்த்தப் பார்க்கின்றனர் — திராவிட நாடு பிரிந்தால் இந்தக்கதிதான் ஏற்படும் என்று வறிதே கூறி ஒரு அசைக்க முடியாத உண்மையை மக்கள்மனதில் இருந்து மறைத்து விடலாம் என்று ஏனோ மனப்பால் குடிக்கின்றனர்!

8-ம் பக்கத் தொடர்ச்சி

புதிதாக அமையவிருக்கும் மிகப் பெரிய துறைமுகமும் கல்கத்தாவில்தானாம்! இங்கு, இல்லையாம்!!

கண்ட்லா, என்றொரு பெரிய துறைமுகம், வடக்கேயிருக்கிறது—ஏற்கனவே. இரண்டாவதாக, இன்னொன்றும், வடக்கேயே போகிறது.

காவிரிப்பூம்பட்டினம் — காயல்பட்டினம் — போன்ற பழைய பழைய இடங்கள் உண்டு. முப்பக்கமும், எந்த இடத்தில் வேண்டுமானாலும் துறைமுகம் கட்டலாம். மேற்கே கொச்சி உண்டு! கிழக்கே, நாகையுண்டு! தெற்கே தூத்துக்குடி உண்டு! — இங்கேயெல்லாம் இல்லாமல், மிகப் பெரிய துறைமுகமாக, கல்கத்தாவை ஆக்கப் போகிறார்களாம்.

கலம் செய்தோர் நாம்! கடல் கடந்தோர் நாம்! தொழிலறிந்தோர் நாம்! துந்துபி முழக்கியோர் நாம்!

இவை பொய்யல்ல என்று, ஏடுகளும், அறிந்தவர்களும், இலக்கியங்களும், சொல்லுகின்றன.

ஆனால், டில்லியோ, எது இருந்தாலென்ன, 'வடக்கு வடக்குதான்' என்கிறது. இதைக்காணும் போது, வாடாதா உள்ளம் — ஆடாதா இதயம் நமக்கு!!

இந்தக்கிழமை சென்னைக்குவந்த டில்லி அமைச்சர் எஸ். கே. பட்டீல் என்பார்; இத்தகவலைத் தெரிவிக்கிறார். சென்னை—பம்பாய்—கல்கத்தா இப்படிப்பட்ட இடங்களைக் குறிப்பிட்டு, இவைகளில் எங்கே பெரிய துறைமுகம் கட்டலாம் என்று கண்டுபிடிக்குமாறு பிரிட்டிஷ் நிபுணர் குழுவொன்றைக் கேட்டுக்கொண்டார்களாம். அந்தக் குழு, கல்கத்தாவைச் சிபாரிசு செய்ததாம்!!

வடக்கே ஒன்று கட்டிவிட்டோம்—தென்னாடு முப்புறமும் கடல் சூழ்ந்தநாடு, முன்னாளில் புகழ் கொண்டிருந்த பூமி, இப்போதும் அகிலும் மிளகும் முந்திரியும் அனுப்புகின்ற நாடு — இங்கு ஒரு பெரிய துறைமுகம் கட்ட வேண்டும் என்கிற எண்ணம், தன்னாலே வந்திருக்க வேண்டுமே டில்லிக்கு. அப்போதன்றோ, பாரபட்சமற்றோர் என்று சொல்ல முடியும்.

குழுவிடம் பொறுப்பைத் தந்து விட்டால், அந்தக் குழுவைத் தமது விருப்பத்துக்கேற்றவாறு இணங்கவைக்க முடியாதா என்ன, இன்றுள்ள சூழ்நிலையில்.

தென்னாட்டார்கேட்டால் என்ன பதில் தருவது?—என்று தயாராக இருந்தவர்போல, பேசுகிறார் பட்டீல்! ஒரு சமாதானம் சொல்லியிருக்கிறார், சிறு சிறு துறைமுகங்களை விருத்திசெய்வதுபற்றி ஆலோசிக்க ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டிருப்பதாக!'

கமிட்டி, தென்னாட்டுக்குரிய பங்கை வழங்கும் என்பது, என்ன உறுதி. கமிட்டிகளை ஆக்குவோரும், ஆட்டிப்படைப்போரும், யார்? அவர்கள்தானே.

நெஞ்சு பொறுக்கவில்லை—குரல் எழுப்பினால், 'கொடியோர்' என்கின்றனர்—இந்திய ஒற்றுமையே ஏற்றம் தரும் என்கின்றனர்—இந்த ஒற்றுமைக்காக, இத்தனை நாளாக நாம் அடைந்துவரும் அவதிபோதாதா! பட்டுவரும் பாடு போதாதா!!

காதல் என்பது சாதாரண விஷயம்தான். ஆனால் அது இயற்கையின் இறுமாப்புடன் விசித்திரமான உணர்ச்சி தாங்கிப் புரட்சி வடிவில் தலையலங்காரத்தோடு வரும்போது, எல்லோரும் கண்டு மதிமயங்கி ஆச்சரியப்படுகிறார்கள். இயற்கையின் எழிலையும்குதூகலத்தையும் காதல் மறுமலர்ச்சியில் கொந்தளிப்பதைப் பார்க்கிறோம். ஆண்—பெண் சந்திப்பில் அந்தக் கொந்தளிப்பு மின்னிக் கொட்டுவதைப் பார்க்கலாம். பெண்களின் கண்களில் காதல் உணர்ச்சி ததும்பி மத்தாப்பிடும்போது ஆண்கள் எப்படி இதை மறந்து தப்பி ஓட முடியும்!

# தேயும் தென்னகம்

—[ச. கனகராசன்]—

'வடக்கு வளர்கிறது—தெற்குத் தேய்கிறது' என்ற பேருண்மை காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் பலராலும், மற்றும் இந்தியப் பொருளாதார நிபுணர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள உண்மையாகும். அதைத்தான் நாம் பல தடவை சுட்டிக்காட்டி வந்திருக்கின்றோம்.

"வடக்கு வளர்கிறதுஎன்றும்—தெற்குத்தேய்கிறது என்றும் கூச்சல் போடுகிறார்கள். எங்கெங்கு தொழில்கள் வளர இடம் இருக்கிறதோ. அங்குதான் அவற்றை ஏற்படுத்த முடியும். தூத்துக்குடியில் முத்து எடுக்கின்றார்களே, நெய்வேலியில் சுரங்கம் வெட்டுகிறார்களே என்று தஞ்சை ஜில்லாக்காரர்கள், இங்கும் சுரங்கம் வெட்டவேண்டும், முத்துக் குளிப்பு நடத்தவேண்டும் என்றால் சமுத்திரம் வேண்டாமா? சுரங்கத்தில் கரி வேண்டாமா? இப்படிப் பேசுகின்றவர்களைப் பற்றி என்ன நினைப்பது''—இந்த அறிவுரைகள் அண்மையில் காமராசர் தஞ்சையில் வழங்கியதாகும்.

'தூத்துக்குடியில் முத்துக் குளிக்கிறார்கள் — நெய்வேலியில் சுரங்கம் வெட்டுகிறார்கள். இதைக் கேட்ட தஞ்சை ஜில்லாக்காரர்கள் தஞ்சையிலும்முத்துக்குளியுங்கள், சுரங்கம் வெட்டுங்கள் எனக் கேட்பதைப்போல தி. மு. கழகத்தவர்கள் கேட்கிறார்கள்' எனக் குறிப்பிடுவதன் மூலம் தி. மு. கழகத்தின் நேர்மையான கோரிக்கைகளைத் திரித்துக் கூறியிருப்பது தெளிவாக விளங்கும்.

முதலமைச்சர் கூறுவதுபோல், தூத்துக்குடியில் முத்துக் குளிப்பதைப்போல் தஞ்சையிலும் முத்துக் குளியுங்கள் — சுரங்கம் வெட்டுங்கள் என்பதல்ல தி. மு. கழகத்தின் கோரிக்கைகள்.

தென்னாட்டில் தொழில் வளம் பெருகவேண்டியதற்கான கோரிக்கைகள் பலவற்றில் இதோ மூன்று:—

1. சேலத்துமண்ணில் மறைந்து கிடக்கும் இரும்புக் கனிப் பொருளைத் தோண்டி எடுத்து உருக்கி இரும்பாக ஆக்க அப்பகுதியில் ஒரு தொழிற்சாலை துவங்க வேண்டும்.
2. சேலம் மாவட்டத்தில் உள்ள மாக்னசைட்டை வெட்டி எடுத்து ஒரு அலுமினியத் தொழிற்சாலை நிறுவ வேண்டும்.
3. மேட்டூர் பகுதியிலாவது, நீலகிரிப் பகுதியிலாவது ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்கவேண்டும்-என்பது.

இக்கோரிக்கைகளை முதலமைச்சரின் கருத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் முதலமைச்சரின் திரித்துக்கூறும் தன்மை தெற்றென விளங்கும்.

'வடக்கு வாழவும் இல்லை—தெற்குத் தேயவும் இல்லை' என்று சமரசப் போதனைகள் புரிகின்ற 'காமராசர்'களுக்கு, வடக்கு வளரும் விதத்தை ஒரு சில சான்றுகளால் விளக்க விரும்புகிறோம்.

வடநாட்டில் தொழில் வளம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது.

காசிக்குப் பக்கத்திலுள்ள மந்துவாடியில் இரயில் இயந்திர உறுப்புக்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ரூ. 4·8 கோடி செலவில கட்டப்படுகிறது. இந்தப் பட்டறையில் 2500 பேர் வேலை வாய்ப்புப் பெறுவார்களாம்.

இந்தியாவில் உள்ள 112 சணல் ஆலைகளில் 4 ஆலைகள் மட்டுமே நம் திராவிடத்திற்கு. பாக்கி 108 சணல் ஆலைகளும் வடக்கில்தான்.

மணிக்கு 100 காலன் வீதம் நல்ல பால் காய்ச்சித் தரும் இயந்திர சாதனம் பம்பாய் மாநிலத்தில் ஆரே பால் பண்ணையில் அமைக்கப் பட்டிருக்கிறதாம். ஐ. நா. சிறுவர் அவசர நிதியிலிருந்து இந்தியாவுக்கு நன்கொடையாகத் தரப்பட்ட இந்த இயந்திரத்தை, இந்திய அரசாங்கம் பம்பாய் மாநிலத்திற்குப் பயன்படுத்தியிருக்கிறது.

காகிதத் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதில்கூட டில்லிபீடத்தினர் 'மாற்றாந்தாய்' மனப்பான்மையில்தான் நடத்தியிருக்கின்றனர். 'அகண்ட பாரத'த்தில் உள்ள 34 காகிதத்தொழிற்சாலைகளில் வடக்கில் 28. நம் திராவிடத்திற்குக் கிடைத்தது 6 மட்டுமே. அந்த ஆறு ஆலைகளில் தமிழ் நாட்டில் ஒன்றுகூட இல்லை. கோவை, நீலகிரி, சேலம் மாவட்டங்களில் காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்குத் தேவையான மூங்கில் கிடைக்கக்கூடிய வசதியிருந்தும், காகிதத் தொழிற்சாலை அமைப்பதில் டில்லி குறுகியநோக்குடன் நடந்துகொள்கிறது.

இரண்டாவது 'பெர்ரோ மாங்கனிஸ்' உற்பத்தித் தொழிற்சாலையும் வடநாட்டில் ஒரிசா மாநிலத்தில் ராயகடா என்ற இடத்தில் அமைக்கிறார்களாம். முதல் தொழிற்சாலையும் அதே மாநிலத்தில் கியாஞ்சகார் மாவட்டத்தில் ஜோடா என்னுமிடத்தில் துவங்கப் பட்டிருக்கிறது.

இந்திய உபகண்டத்தில் உள்ள ஏழு பெரிய தையல் இயந்திரத் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றுகூடத் தென்னகத்தில் இல்லை. எல்லாம் வடக்கே பஞ்சாபிலும், டில்லியிலும், மேற்கு வங்காளத்திலும் தான் இருக்கிறது. பெரிய அளவில் உள்ள இந்த ஏழு நிறுவனங்களைத் தவிர, சிறு தொழில் துறையில் மொத்தம் 35 தையல் இயந்திரத் தயாரிப்புப் பிரிவுகள் இருக்கின்றன. இந்த 35 சிறு பிரிவுகளில் 34 வடக்கிலும் தெனாட்டில்—ஆந்திரத்தில் ஒன்றே

ஒன்றுதான் இருக்கிறது. இந்தச் சிறு தொழிலில்கூட வடநாடு தென்னாட்டைப் புறக்கணித்திருக்கிறது.

'வளரும் வடக்கினைப் பாரீர்' என்று நாம் சொன்னால், எங்கே வளர்கிறது வடக்கு? வளரவில்லை. தெற்குத்தான் வளர்ந்திருக்கிறது என்று புலம்பிடும் 'கனம்'கள், தங்கள் அகக்கண்களைத் திறந்து பார்த்திடட்டும், வாழ்வது வடக்கா? தெற்கா? என்பதை.

சென்ற பதினொரு ஆண்டுகளில் தென்னகத்தில் உருப்படியான திட்டங்கள் எதுவும் செய்துமுடிக்கவில்லை. கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகளால் தென்னகத்துத் திட்டங்கள் வடநாட்டு ஏகாதிபத்திய வாதிகளால் எவ்வாறு அலட்சியப் படுத்தப்பட்டிருக்கிறது என்பது வெள்ளிடை மலையென விளங்கும்.

புல்கானினும் குருஷ்சேவும் இங்கு வந்தபோது சொன்னார்கள் —'தெற்கு, புறக்கணிக்கப்பட்டிருக்கிறது, தெற்கே ஒரு அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்தினால் அதற்கு ரூ. 10 கோடிவரை உதவி செய்கிறோம் என்று. ஆனால் கவனிக்கப்படவில்லை. இப்போது 'இங்குள்ள அலுமினிய மூலப் பொருள் தரக்குறைவானது — தேவையான அளவில் இல்லை என்று காரணம் காட்டித் தட்டிக் கழிக்கிறார்கள்.

நெய்வேலித் திட்டத்தில் நிலக்கரி வெட்டியெடுப்பதைத் தவிர, உரத் தொழிற்சாலை அமைப்பது பற்றியும் தெர்மல் ஸ்டேஷன் அமைப்பது பற்றியும் பேசாதே! என்று வாய்க்குப் பூட்டுப்போடுகிறார்கள்.

சேது சமுத்திரத்திட்டம் என்ன ஆயிற்றென்றே தெரியவில்லை.

மூன்றாவது கப்பல் கட்டும் தொழிற்சாலையைத் தூத்துக்குடியில் நிறுவவேண்டும் என்று திட்டமிட்டு, பின்னர் அரசாங்கம் நியமித்த பிரிட்டிஷ் நிபுணர்குழு, 'தூத்துக்குடியையும் மற்றப்பிற துறைமுகங்களையும் விட கொச்சிதான் சிறந்த இடம்' என்று அறிவித்தும் வடநாட்டில் உள்ள கட்ச் வட்டாரத்தில் இருக்கும் கண்ட்லா துறைமுகத்தில் அமைக்க முற்படுகின்றார்களாம். இதன் மூலமே டெல்லி தெற்கை வஞ்சிக்கிறது என்பது விளங்கும்.

கல்கத்தாவிலும் பம்பாயிலும் இருப்பதைப்போல மத்திய சர்க்காரின் அச்சகம் ஒன்றைத்தென்னகத்தில்—கோவையில் நிறுவுவது என்று திட்டமிட்டுப்பின்னர்நிறுத்தப்பட்டது.

தாம்பரத்திற்கும் விழுப்புரத்திற்குமிடையே இரயில் பாதையை மின்சாரமயமாக்கும் திட்டம் இன்னும் பேச்சளவிலேயே நின்றுகொண்டிருக்கிறது. ஆனால் வடநாட்டில் — வங்கத்தில், ஹௌராவிற்கும் பாத்வானுக்குமிடையே 66-மைலுக்கு இரயில் பாதை மின்சார மயமாக்கப்பட்டிருக்கிறதாம். நான்கு ஆண்டுகட்கு முன்பு அனுமதிக்கப்பட்ட இத்திட்டம் கிழக்கு இரயில்வேயில் மின்சார மயமாக்கும் திட்டத்தின் ஒரு பகுதிதானாம். ரூ 15-கோடிவரை செலவிடப்பட்டிருக்கிறதாம். இதைத் தவிர ஹௌராவிற்கும்—மொகல் சராய்க்குமிடையேயுள்ள 412-மைல் நீள இரயில் பாதையையும் மின்சாரமயமாக்கப் போகிறார்களாம். ஆனால் நம் தென்னகத் திட்டமாகிய தாம்பரம் — விழுப்புரம் மின்சார இரயில்பாதை செத்துக்கொண்டிருக்கிறது.

வடநாட்டில் 17-இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் கிடைக்கக் கூடிய சிர்கிந்த் என்ற கால்வாயை 15000 தொழிலாளர்களைக் கொண்டு 20-இலட்சம் சிமெண்ட் மூட்டைகள், 1700-டன் உருக்கு 62000-டன் நிலக்கரி, 1850-இலட்சம் ஓடுகள், 250-இலட்சம் செங்கற்கள் இவைகளைப் பயன்படுத்தி வெட்டி ஸட்லஜ்நதியுடன் இணைத்துள்ளார்களாம். ஆனால், உள்நாட்டு நீர்த்துறைப் போக்குவரத்திற்குப் பயன்படக்கூடிய சென்னை பக்கிங்காம் கால்வாய்த் திட்டம் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது.

பலகோடி ரூபாய் செலவில் ஆவடியில் நிறுவப்பட்டுப் பல ஆண்டுகளாக இயங்கிவரும் பல்லாயிரக்கணக்கானவர்கட்கு வேலை தந்த இராணுவத் தளவாடத் தளத்தை ஆவடியிலிருந்து டில்லிக்கு மாற்ற மத்திய அரசினர் முற்படுகின்றனராம்.

தென்னாட்டில் பல்லாயிரவர்கட்கு வேலை தேடித்தந்த இராணுவ தளமும் டில்லிக்குச் செல்கிறதே என்று நாம் சொன்னால் காங்கிரஸ் 'கனம்'கள் 'எங்கிருந் தாலும் நம் இந்தியாவில்,தானே இருக்கப்போகிறது. இதற்கு ஏன் கூச்சல் போடுகிறீர்கள்?'' என்று வினவ ஆரம்பித்துவிடுகிறார்கள். இராணுவத் தளமும் போய்விட் டால் வேலையில்லாத் திண்டாட் டம் இன்னும் அதிகரிக்குமே என்று தெரிந்து கொள்ளாது 'ஏக இந்திய'ப் பற்றால் வாய்மூடி மௌனிகளாக இருக்கிறார்கள்.

தமிழகத்தில் ஒரு தொழிற்சாலை யைக்கூட நிறுவத் தன்னால் இய லாத சென்னை அமைச்சர்கள் இருக்கின்ற உயிருக்கு உயிரான இராணுவத் தளத்தையும் விட்டு விட்டு என்ன செய்யப்போகிறார் களோ தெரியவில்லை!!

'செயற்கைப்பட்டு நூல் இறக்கு மதிக்கு அனுமதி வழங்குவதிலும் இரும்பு — உருக்குச் சாமான்கள் 'சப்ளை' செய்வதிலும் தமிழ் மாநிலத்திற்கு டெல்லி அநீதி இழைத்திருக்கிறது' என்னும் பொருள்பட ஆங்கில ஏடாம் 'மெயில்' ஏட்டில் 'பெர்டினக்ஸ்' என்பார் டெல்லியிலிருந்து எழுதி யிருக்கிறார்.

எழுதிய ஏடோ? நம் ஏடல்ல எழுதியவரும் நம்மைச் சார்ந்தவ ரல்ல. ஆனால் அவர் தமிழகத்து மக்களுக்கு எடுத்துக்காட்டுகிறார் 'டெல்லி தமிழகத்துக்கு அநீதி இழைத்திருக்கிறது' என்று.

இதுபோன்று மாற்றாரும் ஒப்புக் கொள்ளுகின்ற அளவுக்கு வடநாடு தென்னாட்டைப் புறக்கணித்திருக் கிறது.

அதனால்தான் நாம் கூறுகிறோம் நம் நலனைக் கவனிக்காத, நம் கலாச்சாரத்திற்கும், பண்பாட்டிற் கும், நாகரிகத்திற்கும் ஒத்துவரா வடவரோடு எப்படி இணைந்து வாழமுடியும் என்று!

★

## திருத்தம்

9—11—58 திராவிடநாடு பக்க 5-ல் உள்ள "கல்விவளர வழி செ யுங்கள்" என்னும் கட்டுரையி இரண்டாம் பத்தியில், முன்பு 1 என்ற மாணவர் விகிதம் இரு போதே பள்ளி இலாபம் 30% எ பதை 60% என்று திருத்தி படிக்கவும்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

அடுத்து வரும் கள்ளன் 'அற்ப் பொருள்தான் என்றாலும், அரைவயிறாறுப் பசியையாவது போக்குமே' என்று உள்ளத்துள்ளே எண்ணுகின்றான். கடைக்காரன் ஏமாறும நிலை வாய்க்குமா என ஏங்குகின்றான்.

கடைக்காரன் மூன்றுபேர் வந்தும் வியாபாரம் நடக்கவில்லையே என வருந்துகின்றான்.

பொம்மை ஒன்றுதான்· ஆனால் பார்த்த மூன்று பேருடைய உள்ளத்திலும மூன்று வகையான உணர்ச்சியை எழுப்பியது.

அழகும் அப்படித்தான். கண்ணுக்கு முன் நின்று காண்பவர் எவரோ, அவர் உருவே தெரிவது போல், கருதுபவர் எவரோ அவர் கருத்தே எப்பொருளிலும் தோன்றும்.

அதைப்போலத்தான் சுவரொட்டிகளைக் காண்போரில் சிலருடைய சிந்தை கலங்கியிருக்கின்றது. அழகான சுவர், அழகான தெரு, அழகான நகரம் — இந்த அழகைக் குலைக்கின்றனவே இவை' என்று எண்ணுகின்றனர். திரும்புகின்ற பக்கமெல்லாம் வண்ணக் கலவையைக் காணுகின்றனர். 'இது என்ன அநியாயம்' என்று அலமருகின்றனர். ஆனால் சுவரொட்டிகளைக் கிழித்துவிட்ட நிலையில் நம்முடைய தெருக்களில் சுவர்கள் எப்படி இருக்கும் என்பதனை ஒரு முறை எண்ணிப் பாருங்கள்! அந்த அலங்கோலமான நிலையை மூடி மறைத்து அழகான போர்வை போர்த்திக் கொண்டிருப்பவை சுவரொட்டிகள் தாம்.

ஆனால் சிலருக்கு இவை அழகைக் கெடுப்பதாகத் தோன்றுகின்றன.

அதனால் சில நாட்களுக்கு முன் சென்னை மேல்சபையில் அழகைக் கெடுக்கும் விளம்பரங்களைத் தடுக்க வேண்டும் என்று ஒரு மசோதா கொண்டுவந்திருக்கின்றனர்.

அந்த மசோதா நிறைவேறினால் சுவரில் 'அழகைக் கெடுக்கும் விளம்பரங்களை ஒட்டுவது கூடாது. மீறுவோருக்குத் தண்டனை உண்டு.

அழகு என்றால் ஆளுக்கு ஒரு வகையாக எண்ணிக்கொண்டு, இதுதான் அழகு, அது அழகற்றது என்று எண்ணிவிட்டால் என்ன செய்வது?

அதனால் அழகைக் கெடுப்பது என்றால் என்ன என்பதைப்பற்றி விளக்கம் தரப்பட்டிருக்கின்றது.

மனித உருவை மாண்பற்ற முறையில் வெளியிடுவதோ, உறவு முறையை மறைவின்றி வெளியிடுவதோதான் அழகைக் கெடுக்கும் விளம்பரம் என்றே எண்ணத் தோன்றும். ஆனால் அந்த மசோதா அப்படி மட்டும் கருதவில்லை. அழகைக் கெடுப்பது என்ற சொல்லுக்கு அது தரும் பொருள் வேடிக்கையாக இருக்கின்றது.

'இந்தியா அல்லது மாநிலங்களில் உள்ள சர்க்கார்களைக் கவிழ்க்கத் தூண்டும் வகையில்'

வெளியிடப்படும் சுவரொட்டி அழகைக் கெடுக்கும் விளம்பரமாம்!

அழகு என்றால் **சர்க்கார்** என்பது புதிய கண்டுபிடிப்புத்தான். சர்க்காருக்கு மாறாக நடப்போருக்குத் தண்டனை தரவேண்டும் என்பது எங்கள் நோக்கம் என்று சுலபமாகச் சொல்லியிருக்கலாம். அதைவிடுத்து நான் அழகைக் காக்கிறேன் என்று புறப்பட்டு, சர்க்காரைக் கவிழ்க்கும் செயல் 'அழகைக் கெடுப்பது' என்றால் என்ன பொருள்?

சர்க்காரில் இருப்போரின் அழகு வேண்டுமானால் அதனால் கெடுமே ஒழிய, அது அழகைக் கெடுப்பதாக எப்படி ஆகும்?

இது அரசியல் பிரச்சினை; சர்க்காரை கவிழ்ப்பதும், கவிழ்ந்த சர்க்காரைத்தூக்கி நிறுத்துவதும் அரசியல் அரங்கில் ஆராயப் பட வேண்டிய செய்திகள். அவை எப்படி அழகைக் கெடுப்பதாக அமையுமோ தெரியவில்லை!

**இன்றையதினம் ஆட்சிப்பீடத்தில் ஏறி உட்கார்ந்துகொண்டிருப்பவர்கள் மாற்றுக் கட்சியினரின் எந்தச்சுவரொட்டியையும் இந்தச் சட்டப்பிரிவைக் காட்டித் தடை விதிக்கலாம், தண்டனை தரலாம்.** ஏன் என்றால் இது சர்க்காரைக் குறைகூறுகின்றது. அந்தக் குறையை மக்கள் உணர்ந்து கொண்டால் கொதிப்படைவர். கொதிப்படைந்தால் **சர்க்கார்** நிலைக்காமல் போகலாம், அதனால் இந்தச் சுவரொட்டியைத் தடுப்போடு, இதைத் தயாரித்ததற்கு-ஒட்டியதற்கு இதோ பிடியுங்கள் தண்டனை என்று சொல்லி மாற்றுக் கட்சியினரை வதைக்க ஒரு வழி வகுக்கின்றது.

அடுத்த பிரிவுகளில் சொல்லப்படும் விளக்கங்கள் இப்பொழுது உள்ள சட்டப் பிரிவுகளின்படி தடுக்கப்படக்கூடிய பல வகைக் குற்றங்களைத்தான் எடுத்துச் சொல்கின்றன. பலாத்காரத்தைத் தூண்டுவது, மதத்தின் கருத்தை இழிவுபடுத்துவது போன்ற சில விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன.

பலாத்காரத்தைத் தடுக்கப் பல வகையான சட்டங்கள் இருக்கின்றன. பலாத்காரம் என்பது காட்டுமிராண்டிப் பழக்கம், கண்டிக்கப்படவேண்டியதுதான். நாகரிகம் வளர்ந்திருக்கும் இன்றைய நிலையில் அதைவிடுவதும் தவறு. ஆனால் அது 'அழகைக் கெடுக்கும்' என்ற பட்டியலில் எப்படி இடம் பெறுமோ தெரியவில்லை.

'அழகைக் கெடுப்பது' என்ற தலைப்பில் ஒட்டிவராத செய்கைகளை எல்லாம் இந்த மசோதாவில் சேர்த்திருப்பதைப் பார்க்கும் போது இவர்களுடைய நோக்கத்திலேயே ஐயம் பிறக்கின்றது!

**அழகைக் காத்திடுவதைவிட மாற்றுக் கட்சியினரை அடக்குவதுதான் முக்கியம் என்று கருதும் வகையில் மசோதாவின் விளக்கம் அமைந்திருக்கின்றது.**

அரை நிர்வாணப் படங்கள்— ஆடையின் அலங்கோலம், ஆபாச நிலை இவை போன்றவற்றைப் பொது இடங்களில் பலர் முன் னிலையில் வெளியிடுவது தவறு. அதைத் தடுத்திடவேண்டும் என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அரசியல் மாறுபாடுகளை ஒடுக்கிவிட, கருத்து வேறுபாடுகளைக் களைந்துவிட, இந்த மசோதா முனைகின்றது என்பதுதான் தெளிவாகின்றது.

அழகு கெடாமல் இருக்கவேண்டும் என்பதுதான் முக்கியம் என்றாலும், அதற்கு இதுதான் வழியா? இன்று நாட்டின் அழகு சுவரொட்டிகளினால் மாத்திரம்தான் கெடுகின்றதா?

நாட்டில் இருக்கும் நலிவுகள் எடுத்துச்சொல்ல இயலாத வகையில் மலிந்திருக்கின்றன. சுவரில் ஒட்டப்படும் விளம்பரங்களினுல் மட்டும அழகு கெடவில்லை. அந்தச் சுவரின் அலங்கோலமே, சுவரொட்டியின் வண்ணக் கலவையால்தான் மறைந்திருக்கின்றது.

சுழிவிழுந்த பாதை, பல இடங்களில அழகைக் கெடுப்பதோடு ஆபத்தையும் விளைவிக்கின்றது.

குழியாக இருந்து இன்று மண்குவிந்து மேடிட்டுப்போன ஏரிகள் அழகைக் கெடுத்துக்கொண்டிருக்கின்றன. விளைநிலங்கள் விறகுச் செடிகளால் அழகு கெட்டிருக்கின்றன. ஆறுகள் நீரின்றி அழகு கெட்டிருக்கின்றன.

மக்கள் செய்யத் தொழில் இன்றி, செய்த தொழிலுக்குச் சிறப்பின்றி அழகு கெட்டிருக்கின்றனர். குவளை போன்ற கண்கள் இன்று கவலையால் கண்ணீர் நிறைந்த குளங்களாகி அழகு கெட்டிருக்கின்றன.

அழகான தமிழ்நாடு அனுதைப்பிள்ளையைப்போல். தன் இயற்பெயர் இழந்து யாரோ இட்ட பெயர் சுமந்து அழகு கெட்டிருக்கின்றது.

எழிலோடு பிறந்த தமிழ் எதிர்த்துவரும் இந்தியினைக் கண்டு மருண்டுவிட்டுருக்கின்றது.

வளம் மலிந்த தமிழர் வாழ்வுக்கு வழி தேடி அங்கும் இங்கும் அலைந்து, அல்லல் பட்டு, அடிமைப்பட்டு, அழகு கெட்டிருக்கின்றனர்.

இப்படி, இருந்த அழகும் குலைந்து தமிழ்நாடும், தமிழரும் வாடிக் கிடைக்கையில், சுவரின் அழகு கெடுகின்றது என்ற போர்வையில் வளரும் ஜனநாயகத்தின் அழகைக் கெடுக்கும் மசோதா வெளியிடப்பட்டிருக்கின்றது!

அதுவும் மேல் சபையில்! வாழ்க்கையில் பல்வேறு துறைகளில் இருந்து பழுத்த அநுபவம் பெற்றவர்கள் பலர் இருக்கும் அந்தச் சபையில்.

செய்யவேண்டிய பணிகள் எத்தனையோ இருக்க அவ்வளவையும் விட்டு, 'கிழவியைத் தூக்கி மனையில உட்காரவைக்கும்' பணி தானு கிடைத்தது?

வேண்டாம், அழகைக் கெடுக்கவேண்டாம். அரசியல் அழகைத் தயவு செய்து கெடுக்கவேண்டாம்.

★

# இது குற்றமா?

[இரா. வளையாபதி]

வரலாற்றிலே இடம் பெற்ற ஒரு வனிதையின் சோகக்கதை. அதனை உருவகப் படுத்தி இங்கு தரப்பட்டிருக்கிறது.

பிரான்சு நாட்டிலே பிறந்தவள் நான். 'டாம்ரிம்' என்னும் சிற்றூர் தான் என்னுடைய சிங்காரச் சோலை. செழிப்பான இடம் நோக்கிச்சென்று ஆடுமாடுகளை மேய்த்து அவைகளுடைய வயிற்றை நிரப்புவதுதான் என்னுடைய அன்ருடத் தொழிலாக இருந்து வந்தது. நான் என்ன சுகபோகத்தில் திளைத்துக்கிடப்பவளா? ஆடு மாடு மேய்க்காமல் அழகான வெல்வெட்டில் அமர்ந்து ஆனந்தமாக காலத்தைக் கழிப்பதற்கு? இல்லை. நான் ஒரு ஏழைப்பெண்.

"ஏழைகள்தானே... ஏது அறிவு அவர்களுக்கு? இருள்தான் மண்டிக் கிடக்கும் அவர்தம் இதயங்களில்" என்று சொல்லிடும் இருதய மற்றவர்களும் இருந்துதான் வந்தார்கள் எங்கள் நாட்டில். தோட்டத்தில் பூத்தால்தான் மலர் மணம் தரும் என்று, கூறித்திரியும் துர்மதி 'படைத்தவர்கள் அவர்கள் என்று எனக்குத் தெரியும்.

மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் தான் என்னை முற்போக்குள்ளவளாக மாற்றிற்று. முன்னணியில் நிற்கும் வீராங்கனையாக ஆக்கிற்று.

பதினைந்தாம் நூற்றுண்டில் வாழ்ந்த பாவை நான். நான் ஆடிப்பாடிக் கொஞ்சி விளையாடிய அருமைப் பிரான்சு நாட்டின் வடக்குப் பகுதி ஆங்கிலேய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. தெற்குப் பகுதியில்தான் நானும் என் இனத்தாரும் வாழ்ந்துவந்தோம். இந்தப் பகுதிக்கு எங்கள் இனத்தவராகிய சார்லஸ் என்பவர் அரசராக இருந்தார்.

'நம்முடைய இனத்தவராயிற்றே, நம்முடைய நலன்களிலே நாட்டம் செலுத்துவார், நலிவு போக்குவார்; நாட்டை நந்தவனமாக்குவார்' என்று எண்ணித்தான் சார்லஸ் நாடாளச் சம்மதித்தோம். ஆனல்......? அவர் ஆட்சிக்கு வந்தபின் எங்கள் ஆசையை இடித்துத் தூளாக்கினர். சொந்த நாட்டைப்பற்றி அக்கரையின்றிச் சோம்பேறியாக இருந்தார். சுகபோகத்தில் மிதந்தார். சுழல்விழி காட்டும் சுந்தரிகளின் மடியில் தூங்குவதே நாட்டிற்குச் செய்யவேண்டிய நற்பணி என்று நினைத்து அவர்களது நீள் கரங்களுக் கிடையில் நிலையிழந்து — நேர்மையை மறந்து-நீதிக்கு பிரிவுபசாரம் தந்துவிட்டுச் சுருண்டு கிடந்தார்.

இப்படிப்பட்ட மிருக இதயம் படைத்தவனை ஏன் அரசனுகப் பெற்றோம்? இவனுல்எப்படித் தாயகம் எழில் பெறும்? என்றைக்கு இன்பப் பூங்காவாக மாறும் என்று நினைத்து நினைத்து எ

தனை முறை கண்ணீர் விட்டிருப்பேன் தெரியுமா? எவ்வளவு வேதனைப் பட்டிருப்பேன்? இவனுடைய அறிவற்ற செயலும் அற்பக் குணமும் ஆங்கிலேயரின் காதிற்கு எட்டியிருந்தால் அவர்கள் சும்மாவா இருப்பார்கள்...?

பசிப்பதற்குப் புள்ளிமான் கிடைத்தால் புலி பேசாமல் உறங்கிக்கொண்டா இருக்கும்? புற்றிலிருக்கும் பாம்பிடம் தவளை போனால் 'போய்விடு' என்று கூறும் அந்த நச்சுப் பாம்பு?

இப்படிப்பட்ட நிலையில் நாடு இருக்கிறதே, 'எடுத்தார் கைப் பிள்ளையாக நாடு ஆகிவிட்டால்... என்ன செய்வது? என்னுடைய பிரான்சு, 'எசமான் முன் இளித்து நிற்கும் அடிமையாக வாழ்வதா? இல்லை. முடியவேமுடியாது! இதற்கோர் வழி தேடியாக வேண்டும். இதற்காக என்னால் ஆனதைச் செய்யவேண்டும். எம் தாயகத்திற்காகப் பயன்படாத இந்த உடல் இருந்தாலென்ன? இறந்தாலென்ன? என்ற எண்ணம் எனக்கு அடிக்கடி ஏற்படும். ஆங்கிலேயரால் பிரான்சிற்கு ஆபத்து நேரிட்டால் ஆமையாக இருந்துவிடக்கூடாது. அஞ்சி ஒளிந்திடும் கோழையாக வாழக்கூடாது. அரும்பணி செய்யவேண்டும்.

அப்படிப்பட்ட நாள் இந்த அபலைப் பெண்ணுக்கு என்றைக்கு வாய்க்குமோ! அந்த நாளை நோக்கி ஆர்வத்தோடு காத்திருந்தேன். ஏன்...? அந்த ஆர்வம் நாட்டுப் பற்றுள்ளோர் அனைவருக்கும் இருக்கத்தானே செய்யும்? அப்படிப்பட்ட ஆர்வம் — அசையாத உள்ளம்—அடிபணிய மறுத்திடும் நெஞ்சுரம் — அணியாக் கொள்கைப் பற்று நாட்டிலுள்ளோர் அனைவருக்கும் ஏற்படக்கூடியதா? நாடு நயவஞ்சகர்களின் வேட்டைக் காடாக ஆகக்கூடாது. நறுமலர்ப் பூங்காவாக — நல்லதொரு அறிவுப் பாசறையாக — நாயகர்களின் பாடிவீடாக வேண்டும் என்ற பொதுப்பணியில் ஈடுபட்டுவிட்டால் அவன் இழப்பது ஒன்றல்ல —இரண்டல்ல...பல! அதுபோல அவன் ஏற்றுக்கொள்ளப் போவதும் ஒன்றல்ல...இத்தனை என்று உறுதியிட்டும் கூற முடியாது.

இத்தாப்புப் பேசுவோரின் கேலிக்கணை நம் நெஞ்சைத் தைக்கும். இலிகோள்ளக்கூடாது! இண்டல் மொழி காதைத் துளைக்கும். அதற்காக நம்முடைய கெம்பீரமான நடையைத் தளர்த்திக்கொள்ளக்கூடாது. ஏசல் இளம்பும்! பூசல் புகையும்! எனினும் நம் இலட்சியத்திலிருந்து இம்மியளவு கூட நாம் பிறழ்ந்துவிடக்கூடாது. உற்றாரும் பெற்றோரும் உறுமுவர். 'ஓகோ என்பர். ஒழிந்திடுவாய்' என்று எச்சரிக்கை ஒலி கிளப்புவர்.

நமக்குத் தைரியம் ஊட்டுகிறார்கள் அவர்கள். "நாட்டுப் பணிக்காகச் செல்கிறாய்! நரியும் நாகமும் இருக்கும் உன்னைக் கொத்தி நக்கிட! நன்றாகப் பார்த்துச் செல்" என்று அந்த 'நல்லவர்கள்' நமக்கு நற்போதனை புகட்டுகின்றனர் என்று நினைத்து நம்முடைய நடையை இன்னும் கொஞ்சம் வேகமாகப் போடவேண்டும்.

இந்தளவுக்கு எனக்கு நெஞ்சுரம் இருக்கிறதே! போதாதா...? நாடு வாழ நலிவு போக!

இப்படித்தான் ஒரு நாள் ஏதேதோ எண்ணிக்கொண்டு ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது — எங்களுடைய பிரான்சுநாட்டின் முக்கிய நகரமான ஆர்லியன்ஸ் நகரத்துப் பக்கமிருந்து ஆயிரம் பேருக்கு மேலிருக்கும்.........வரிசையாக — ஆனால் வேகமாக வந்துகொண்டிருந்தார்கள். எனக்கு அருகிலேயே வந்துவிட்டார்கள்.

"எங்கே இப்படிக் கூட்டமாகப் புறப்பட்டுவிட்டீர்கள்?" என்றேன் அதிசயத்தோடு; அதற்கு அவர்கள் சொன்ன பதில் என் நெஞ்சில் அம்புபோல் பாய்ந்து என்னைத் துடிக்கவைத்தது.

ஆம்! ஆர்லியன்ஸ் நகரம் ஆங்கிலேயர்களால் முற்றுகையிடப்பட்டது. ஐயோ...அந்த அரும்பெரும் நகரத்தையே பிடித்துவிட்டார்களென்றால், இனி, பிரான்சின் கதி ......? எண்ணியது என் உள்ளம்! எதிர்காலத்தில் பிரான்சின் நிலை எப்படியிருக்கும் என்பதை என் மனக் கண்ணாடியிலேயே பார்த்துக்கொண்டேன். ஆம்! எதிர்காலத்தில் பிரான்ஸ் ஆங்கிலேயர்களுக்கு ஒரு மாஞ்சோலை--மணி மண்டபம்! எங்களுக்கு......மயான பூமி--மரணபீடம்! ஒரு நிமிடம் என் உள்ளம் இதைப்பற்றி நினைத்தது. பிறகு உறுதியான ஒரு முடிவுக்கு வந்தேன். சார்லசைச் சந்திக்க வேண்டும் என்பதுதான் அந்த முடிவு!

*

"எங்கு வந்தாய்?"

"அரசே! ஆர்லியன்ஸ் நகரை ஆங்கிலேயர் முற்றுகையிட்டிருக்கின்றனரே...! அறிந்திருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்"

"ஆமாம்! அதற்கென்ன?"

"அலட்சியம் வேண்டாம் வேந்தே! ஆர்லியன்ஸ் நகரத்தின் முற்றுகை — நம்மை அழித்திடுவதற்கு ஆங்கிலேயர் காட்டும் அறிகுறி! அவர்கள் எண்ணத்தை அடித்து நொறுக்கவேண்டும்! 'அஞ்சிக் கிடப்பவர்களல்ல பிரான்சு மக்கள்' என்று அறிவிக்கும் பொருட்டும், அயலாரிடம் நம் அருமைப் பிரான்ஸ் அடிமையாகாமல் பாதுகாக்கவும் நாம் இப்பொழுதே கிளம்பவேண்டும்!"

"அது எனக்குத் தெரியாதா?",

"தெரிந்தும் ஏன் மன்னா சிலையாய் நிற்கிறீர்? இனி அந்த எத்தர்களின் பிடியிலிருந்து ஆர்லியன்சை மீட்கமுடியாது என்ற எண்ணமா?"

"நான் நினைத்ததை அப்படியே கூறிவிட்டாய்! ஆம் பெண்ணே! அதை நினைத்துத்தான் என் மனம் அலைமோதிக்கொண்டிருக்கிறது!"

"அந்தப்பயம் அரசபீடத்தில் அமர்ந்துள்ளவர்களுக்கு ஆகாது மன்னா! அறவே கூடாது. நம் உயிரையும் உடலையும் தந்தாவது உரிமை நாட்டை அந்த உன்மத்தர்களின் கரங்களிலிருந்து மீட்போம்! இல்லையேல் இறப்போம்! இனியும் தாமதம் செய்யாதீர்கள் அரசே! என்னோடு ஒரு படையை அனுப்புங்கள்! இப்பொழுதே புறப்படுகிறேன்!"

"படை ஒன்றை உன்னோடு அனுப்புவதா? பைத்தியக்காரி!"

"ஆம்! நான் பைத்தியக்காரிதான்! பழமுதிர் சோலையாம் எம் தாயகத்தைப் பாதகர்களின் பிடியிலிருந்து விடுவிக்கும் 'பைத்தியக்காரப்'பணியில் ஈடுபட்டுவிட்டேன்; நாடு—மொழி என்ற பைத்தியம் என்னைப்பிடித்துக்கொண்டுவிட்டது. மன்னா! எனக்கு ஈட்டி எறிவதிலும்—அம்பு எய்வதிலும்

நிரம்பப் பயிற்சிஉண்டு; என் நெஞ்சத்தைத் துடிக்கவைத்து வேடிக்கைப் பார்ப்பது நியாயமல்ல வேந்தே! படை ஒன்றை அனுப்புக பகைவர்களை புறமுதுகாட்டி ஓடச் செய்கிறேன்! பிறகு ரீம்ஸ் பட்டணத்தில் உமக்கு முடி சூட்டுகிறேன்.

ஆம் இபபடித்தான் பேசினேன் என் அரசனிடத்தில்! என் செய்வேன்? என்னையுமறியாமலே உணர்ச்சிக்கு ஆட்பட்டு இப்படி வார்த்தைகளை,—அவருக்கு என மேல் இரக்கம் ஏற்படும் அளவுக்குக் கொட்டினேன். சார்லசின் மனதிலே கருணை பிறந்தது. அது மட்டுமல்ல, அவர் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார் ஆச்சரியக் கண்களால்! இந்தப் பெண்ணுக்கு எப்படி இவ்வளவு நெஞ்சுரம் வந்தது' என்று எண்ணினாரோ என்னவோ......யார் கண்டார்கள்?

படை ஒன்றுக்குத் தலைமை தாங்கிப் புறப்பட்டேன் ஆர்லியன்ஸ் நகரத்திற்கு—முற்றுகையிட்ட ஆங்கிலேயரை முறியடிக்க! அணிவகுப்பு ஒன்றுக்குத்தலைமை தாங்கி நடத்திச் செல்வதிலே... அடேயப்பா...எவ்வளவு ஆனந்தம் தெரியுமா எனக்கு?

பிறந்த பொன்னாட்டை—பெற்ற தாயினும் மேலான என் திருவீட்டை —பிரான்ஸை பிணக்காடாய் ஆக்க நினைத்திருக்கும் பேயர்களை பின்னோக்கி ஓடச் செய்வதற்கு நான் தலைமை தாங்குவது எனக்குப் பெருமையாக இருந்தது. எனவே பீடுநடை போட்டேன்!

போர் தொடங்கிற்று! புழுதி கிளம்பிற்று! புலிவிழி காட்டிப் புயல் நடை போட்டுச் சென்று அந்தப் புல்லர்களின் உடலிலிருந்து இரத்த மழையைப் பொழியவைத்தனர் என்னாட்டுப் போர் வீரர்கள், விழியிலே வேல் குத்தி வீழ்ந்துபட்டோரின் எண்ணிக்கை வெள்ளையர் பக்கம் ஏராளம்! ஏராளம்!! வெட்டிய கரத்திலே இரத்தம் வழிய விரைந்தோடியவர்கள் தொகை மிகமிக அதிகம்! இரண்டு நாள் இரத்தக் குளத்தில் நீச்சலடித்துக் கொண்டே எதிர்த்துப் போர் புரிந்தோம். இறந்தோர் தவிர ஏனையோர் ஓடினர்.

வெற்றி மாலையைச் சுமந்து கொண்டு விரைந்து வந்தேன் சார்லஸ் வேந்தனிடம்! நான் விரும்பியபடி ரீம்ஸ் நகரிலேயே சார்லசுக்கு முடிசூட்டு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்தக் காட்சியைக் காணும்போதும்—எண்ணும்போதும் என்மனதில் எத்தனை உற்சாக எண்ணங்கள் எழுந்தன தெரியுமா? இவ்வாறு நான் இன்பவானில் சிறகடித்துப் பறந்துகொண்டிருந்தபோது...!

"ஜோன்-டி-ஆர்க் ஒரு நாத்திகப் பெண்; நாட்டிலே அவளை நடமாட விட்டால் நாசம்தான் விளையும் நமக்கு! நலிவுதான் பிறக்கும் மக்களுக்கு! நன்மை அழியும் — தீமை பெருகும்! அந்த நங்கையின் உருவிலே இருக்கும் 'நச்சுப் பாம்பு' உலவும்வரை! ஆமாம் அரசே! அவள் ஆண்டவனுக்கு எதிரி! அவள் ஆகாது! கூடாது! ஆங்கிலேயரை அவள் விரட்டியது வீரத்தால் அல்ல—விவேகத்தால் அல்ல! சூன்யத்தால்! அப்படிப் பட்ட இந்தச் சூன்யக்காரி இன்றைக்கு இல்லாவிடினும் என்றைக்காவது இந்த நாட்டுக்கு இன்னல் விளைவித்தே தீருவாள்! அவள் இருக்கும் வரைக்கும் நமக்கு அழிவு காலம் நிச்சயம்! ஆகவே மன்னா...! நிம்மதி நாட்டிலே நிலவவேண்டுமானால் அவளை நெருப்பிலிட்டு நிர்மூலமாக்கவேண்டும்!"

இப்படி என்னைப்பற்றி — நான் எண்ணியே இருக்காத தீதான பிரச்சாரத்தை ஆரம்பித்தார்கள் எங்கள் நாட்டிலே உள்ள குருமார்கள். இதை நம்பவும் தலைப்பட்டான் சார்லஸ்.

காணிக்கை என்ற பெயரைக் கூறி மக்களிடம் காசுபறிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களைக் கடையர்களாகவும் செய்தனர் கள்ள உள்ளம் படைத்த குருமார்கள். என் செய்வேன் நான்...?

நேற்று என்னை 'நீடுழி வாழ்க' என்று நிகண்டுபாடி வாழ்த்தினர் மக்கள். இன்று, 'நீசப்பெண்ணே! நீ இருந்தாலே நீதி நிலைக்காது! நில்லாதே போ!' என்று நிந்தித்தனர்.

"பெண்ணே ஜோன்-டி-ஆர்க்! பிரான்ஸின் ஜோதி நீ!" என்று சொல்லி என் நெஞ்சில் இன்ப மழையைப் பெய்துவிட்டு—இனிய தேனையும் பிழிந்திட்டான் சார்லஸ்—அன்று! அதற்கு மறுநாள் கடவுளை நிந்திப்பவள் நீ! ஆகவே உன்னைக் கனலுக்கு இரையாக்குகிறேன்' என்று சொன்னான்.

அதற்காக நான் அஞ்சவில்லை-அயரவில்லை—அழவில்லை! அவர்களின் அறியாமையைக் கண்டு சிரித்தேன்.

"என் நாட்டின் எல்லைக்குள் கால்வைத்த எதிரிகளை ஓடச் செய்தது என் குற்றமா? வெள்ளைக்கார வெறியர்கள் முன்பு, என்னுடைய வேந்தன் விலங்கிட்டு நிற்பதைக் கண்டு விழிமூடிப் பதுங்கிக் கிடப்பதற்கு நாம் என்ன வீரமற்றவர்களா?" என்று வீறுகொண்டெழுந்து வெஞ்சமருக்குப் புறப்பட்டு வெற்றி கண்டது குற்றமா? இவைகளெல்லாம் இறைவனுக்கு எதிரான செயல் என்றால், நான் மட்டும் எப்படிக் குற்றவாளியாவேன்? எனக்கு மட்டும் ஏன் இந்தக் கொடூர தண்டனை? சார்லசுக்கும் பிரான்சுநாட்டுப் படைவீரர்களுக்கும் இந்தத் தண்டனையைப் பிறப்பித்தால் இந்தப் பேதைப் பெண் ஏற்றுக்கொள்வதில் தடையேதும் இல்லை!"

இப்படி — இதயமற்ற குருமார்களிடம்—இருவிழியில்லாக் குறுமதி படைத்தவர்களிடம் இயம்பினேன். என் வேண்டுகோளை அவர்களுடைய செவிகள் கேட்க மறுத்தன! தனி ஒருவள் நான்! தாயகத்திற்காகப் பாடுபட்டது தப்பாம்! என்றால் தப்பித்த சார்லஸ் மொழிந்தான் இப்படி!

இன்னும் கொஞ்ச நேரத்தில் என்னை நெருப்பில் எடுத்துப் போடப்போகிறார்கள் இரக்கமற்ற 'மனிதர்கள்'! அப்பொழுதுகூட இதைத்தான் நினைத்தேன்—சொன்னேன்!

"அறியாமை இறந்து என்று அறிவு பிறக்கிறதோ அன்று தான் மக்கள் உணர்வர்-அடிமைத் தனம் நீங்கப் பாடுபடும் விடுதலை வீரனின் அழியா இலட்சியத்தை"!

★